விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 148 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 02 புதன்கிழமை (15.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03,
2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பிரபாகரன் வீட்டின் முன்றலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி



15

## ஒரு குடும்பத்தின் மாதாந்த நுகர்வுக்கென ரூ.103,283 மத்திய வங்கி

(கொழும்பு)
பணவீக்கம் காரணமாக, இலங்கையில் ஒரு குடும்பத் திற்கான மாதாந்த நுகர்வுச் செலவு 02

## விடுதலைப் புலிகளுக்கு மேலும் 5 ஆண்டுகள் இந்தியாவில் தடை

(புதுடில்லி)
விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்திய மத்திய அரசு மேலும் ஐந்து ஆண்டு களுக்கு தடை செய்துள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.
சட்டவிரோத நடவடிக்கை கள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் இந்தத் தடை நீட்டிக்கப்பட் டுள்ளதாக மத்திய அரசு தெரி வித்துள்ளது.
முன்னாள் இந்திய 15

## நினைவேந்தல்களை தடுத்தால் தமிழரின் போராட்ட உணர்வு தீவிரமடையும்

### விக்னேஸ்வரன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)
முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறிய குற்றச்சாட் டில் மூன்று பெண்கள் உட்பட நால்வர் இரவு வேளையில் மிக மோசமான முறையில் பொலிஸா ரினால் கைது செய்யப்பட்டமையைக் கண் டித்து தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் 15


## நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் 15 வயது சிறுமியை தாயாக்கியவர் கைது

(கரணவாய்)
யாழில் 15 வயதுச் சிறுமி ஒருவரை தாய்மை அடையச் செய்த சந்தேகநபரை நெல்லியடி பொலி ஸார் கைது செய்துள்ளனர்.
யாழ்.போதனா வைத்தியசாலையில் குழந்தையை பிரசவித்த 15 வயதுச் சிறுமி ஒருவர் குழந்தையை கைவிட்டு தலைமறைவாகி இருந்தார்.
நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 15

## தடை உத்தரவைக் காண்பித்து அம்பாறையில் நினைவேந்தலை தடுத்து நிறுத்திய பொலிஸார்

### மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு


(அம்பாறை)
அம்பாறை பெரியநீலாவணை - பாண்டிருப்புப் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந் தல் நிகழ்வை முன்னெடுப் பதற்குப் பொலிஸார் தடையேற் படுத்தினர்.
இதுதொடர்பில் மனித உரிமை கள் ஆணைக்குழுவில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.



முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்தவர் களின் நினைவாக முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறப்பட்டு வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.
இந்தநிலையில், நேற்று கல்முனை, பாண்டி ருப்பு அரசடி அம்மன் 04

## புலிகளின் அடையாளங்களை பயன்படுத்தாமல் நினைவேந்தல் செய்பவர்களை பொலிஸார் கைது செய்ய முடியாது

### பாதுகாப்புச் சபையில் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)
விடுதலைப் புலிகள் அமைப்பின் சின்னம், சீருடை மற்றும் அந்த அமைப்பின் அடையாளங்களைப் பயன்படுத்தாமல், நினைவேந்தல் செய்கின்றவர்களைப் பொலிஸார் கைது செய்ய முடியாதென ஜனாதிபதி ரணில் விக்கிரம 15

## தமிழீழம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தால் இலங்கையின் தென்பகுதி காசாவாக மாறியிருக்கும்

### சபையில் விமல் வீரவன்ஸ



(கொழும்பு)
தமிழீழம் ஸ்தாபிக்கப்பட்டிருந் தால் தெற்காசியாவின் காசாவாக இலங்கையின் தென்பகுதி மாறி யிருக்கும் என பாராளு மன்ற உறுப்பினர் விமல் 15

## நினைவேந்தும் உரிமையை நிராகரிக்க முடியாது

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(திருகோணமலை)
தமிழ் மக்கள் தங்களது உயிர்நீத்த உறவுகளை நினை வேந்துவதற்கான முழுமை யான உரிமை உடையவர்கள். அது அவர்களின் அடிப் படை உரிமையாகும். அதனை நிராகரிக்கவே முடியாது என்று இலங்கைத்தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் 02

## ஐஸ் போதைப்பொருளை உற்பத்தி செய்யும் ஆய்வுகூடம் இணுவிலில் முற்றுகை

### இரு சந்தேகநபர்கள் கைது



(யாழ்ப்பாணம்)
யாழ். சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இணு வில் பகுதியில் ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி நிலையம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டது.
இதன்போது இரண்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## கந்தையா பூரணம்

சோரன்பற்று பளையை பிறப்பிடமாகவும் வேம்போடுகேணி பளையை வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா பூரணம் அவர்கள் 14.05.2024 அன்று இரவு 8.00 மணிக்கு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா அவர்களின் பாசமிகு துணைவியும் காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் அன்னலட்சுமி, குலவீரசிங்கம், சுந்தரலிங்கம் (ஓய்வுநிலை பிரதி அதிபர்), கணேசலிங்கம், சித்திரா, தவமணி(பரிசாரகர் ஆதார வைத்தியசாலை - சாவகச்சேரி), கிருஷ்ணலிங்கம்(சாரதி - வீதி அபிவிருத்தி அதிகார சபை, கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் முருகேசு, சின்னப்பிள்ளை, வாகேஸ்வரி, பவானி, சியாமளா, காலஞ்சென்ற பழனிஆண்டி மற்றும் சிவகலை ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மனோகரி, ஜமுனா, குமுதினி, சசிகலா, கோபிகா, கவினா, ஜனுதாஸ், நித்திலன், நிலவழகி, நிலவரசன், பிரகாஸ், அனுசியா, பிரவீனன், பிரசாந்தன், அஜந்தினி, சர்மிலா, சாரதா, நிரோபா, துஷாந், காலஞ்சென்ற சாருஜன் மற்றும் தமிழினி, சாருஜன், வியூகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 15.05.2024 இத்தாவில் பளையில் அமைந்துள்ள அவரது மகன் கணேசலிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் வேம்போடுகேணி குருடிகாடு இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இத்தாவில்,
பளை.

(C-0367)

தகவல் :
குடும்பத்தினர்

## நினைவேந்தும்...

தெரிவித்தார்.

திருகோணமலை மூதூர் சேனையூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சியை விநியோகித்தவர்கள் இரவு நேரத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 27ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று கல்முனையிலும் கஞ்சி விநியோகிக்கும் செயற்பாடுகளுக்கும் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலை குறித்து கருத்து வெளியிடும்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் வைகாசி மாதம் உணர்வுப் பூர்வமானது. அவர்கள் தமது உறவுகளை நினைவு கூருவதற்கான புனிதமான மாதமாகும்.

அவர்கள் போரில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூருவதற்கு முழுமையான உரித்துடையவர்கள். அவர்களின் அந்த அடிப்படை உரித்தினை யாரும் நிராகரிக்கவே முடியாது அவ்வாறு நிராகரிப்பதற்கு இடமளிக்க முடியாது என்றார். (ம-7,10)

## மாதாந்த...

ரூ 103,283 ஆக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

பணவீக்கம் காரணமாக, இலங்கையில் ஒரு குடும்பத்திற்கான மாதாந்த நுகர்வுச் செலவு 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 டிசம்பர் மாதத்தில் 16.5% அதிகரித்து 103,283 ரூபாவாக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த பொருளாதார அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையில், 2022ஆம் ஆண்டு இலங்கையில் ஒரு குடும்பத்தின் மாதாந்த நுகர்வுச் செலவு 88,704 ரூபாவாகவும், 2023ஆம் ஆண்டில் ஒரு குடும்பத்தின் மாதாந்த நுகர்வுச் செலவு 16.5% அதிகரித்து 103,283 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (ம-7,10)

## மடிக்கணனி தேவை

பாவித்த நல்ல நிலையிலுள்ள மடிக்கணனி (Laptop) தேவை.

தொடர்புகளுக்கு:
076 097 3121

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்பு காணி விற்பனைக்குண்டு.


- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சம் தொடக்கம் 20 இலட்சம் வரை உள்ளது.
- தரகர் தேவையில்லை.

(756)

077 88 62 927

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

# காணவில்லை



வைத்திலிங்கம் கனகலிங்கம் எனும் 82 வயதுடைய காலில் காயமுள்ள அதிகம் நடக்க முடியாத வயோதிபர் 12.05.2024 அன்று புங்குடுதீவு மடத்து வெளியில் உள்ள தனது வீட்டின் முன் காணாமல் போயுள்ளார். (G.S பிரிவு J/23). மூப்பின் காரணமாக உள்ள ஞாபக மறதியால் வீடு திரும்ப முடியாமல் அவதிப்படும் நிலையில் இருக்கலாம், வயதின் காரணமாக இவரால் தனிப்பட்டு செயற்பட முடியாது.

தயவு செய்து, இவரைக் காண்பவர்கள் இவரைப் பற்றிய தகவலை கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களிற்கு அறியத்தரவும்.

நன்றி.

(754)

074 090 9597
071 999 9306
077 888 8603
076 834 0781

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரணத்திற்கு வழங்கிய அரிசியை சாப்பிட்ட கோழிகள் உயிரிழப்பு

(கொழும்பு) குறைந்த வருமானம் பெறுவோருக்கு இலவசமாக வழங்கப்பட்ட அரிசியை உட்கொண்ட கோழிகள் உயிரிழந்துள்ளன.

24 லட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 10 கிலோ அரிசியை வழங்குவதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற் கமைய இலவச அரிசி வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

அதற்கமைய ரிதிகம பனக முவிலுள்ள குறைந்த வருமானம் பெறுபவருக்கு வழங்கப்பட்ட அரிசியில் ஒரு பகுதி கோழிகளுக்கு உணவாக வழங்கப்பட்டது.

அரிசியை உண்ட கோழிகள் மயங்கி விழுந்து பின்னர் உயிரிழந்ததாக வீட்டு உரிமையாளர் பொது சுகாதார அலுவலகத்தில் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


குறைந்த வருமானம் பெறுவோருக்கு அரசாங்கம் வழங்கிய அரிசியை சாப்பிட்ட ஏழு கோழிகள் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் அரச பகுப்பாய்வு அறிக்கையை உடனடியாக வழங்குமாறு ரம்படகல்ல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுகாதார அதிகாரிகள் முன்வைத்த தகவல்களை அடுத்து நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலவச அரிசி தரமற்றதென பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி)

# நினைவேந்தும் உரிமைக்காக அடங்காமல் போராடுவோம்

## சித்தார்த்தன் எம்.பி எச்சரிக்கை



(கொழும்பு)

"படுகொலையுண்ட தமது உறவுகளை நினைவேந்தும் நமது மக்களின் உரிமையை அடக்குமுறைச் சட்டங்களை ஏவி மறுப்பது நாட்டில் அமைதி, சமாதானத்துக்கான வாய்ப்பை அடியோடு குலைத்து விடும் என புளொட் அமைப்பின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

இவ்விடயத்தை நிதானத்தோடும், நீதி - நியாயத்தோடும், தார்மீகத்தோடும் அணுகும்படி தனது பொலிஸ் கட்டமைப்புக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறுக்கமாகப் பணிப்புரை கொடுத்து வழிநடத்த வேண்டும்.

அதில் அவர் தவறுவாரேயானால் முன்னரும் சில தடவைகள் தமிழர்களிடம் அரசியல் பாடம் படித்த கசப்பான அனுபவம் போன்ற ஒரு பட்டறிவை திரும்பவும் அவர் பெற வேண்டிய துர்ப்பாக்கியம் நேர்ந்தாலும் நேர்ந்து விடும்.

"தமிழ் மக்களின் நினைவேந்தும் உரிமை மறுக்கப்படக் கூடாது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பல தடவைகள் வலியுறுத்திக் கூறி வந்திருக்கின்றார். அப்படி இருக்க அவரது பொலிஸ் துறை அதற்கு முற்றிலும் மாறாகவே இப்போது நடக்கின்றது.

இதனை நோக்கும்போது நமக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகின்றது.

ஒன்றில் - பொலிஸ் துறை ஜனாதிபதியின் கட்டுப் பாட்டில் இல்லை, தமது கொள்கை - கோட்பாட்டை தமது பொலிஸ் துறை மூலம் செயற்படுத்தச் செய்யும் நிர்வாக அதிகார வலிமை அவரிடம் இல்லாமல் இருக்கலாம். அல்லது அவரும் இரட்டை வேடம் போட்டுத் தமிழரிடம் கூறுவது ஒன்று, தனது சிங்களவர்கள் மூலம் செய்விப்பது வேறு என்று இருக்கலாம்.எது, எப்படியாயினும் இந்தப் போக்கு ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவின் அரசியலுக்கு நல்லதல்ல.

நினைவேந்தல் உரிமைகளுக்காக அடங்காமல் போராடுவோம் என்ற செய்தியை ஜனாதிபதிக்கு கூறி வைக்க விரும்புகின்றேன் என அவர் தெரிவித்தார். (நி)

# தமிழர்களின் ஆன்மாவை சீண்டாதீர்கள்-செல்வம் எம்.பி



(கொழும்பு)

தமிழர்கள் மறைந்த தமது உறவுகளை நினைவேந்தும் நிகழ்வையும் கூட, இனங்களுக்கிடையில் குரோதத்தை ஏற்படுத்துவதற்கு எதிரான சட்டத்தின் மூலம் தடுப்பதற்குக் களம் இறங்கியமை மூலம் தேசிய நல்லிணக்கத்துக்கான கடைசிவாய்ப்பையும் இறுக மூடி இருக்கின்றது.

இலங்கை ஆட்சிப் பீடம் இது பெரும் துரதிஷ்டவசமானதாகும் என ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் தெரிவித்துள்ளார்.

மக்களின் நினைவேந்தல் உரிமை மறுக்கப்பட முடியாத அடிப்படை உரிமை. சர்வதேசத் தரப்புகள் ஐ.நா. மனித உரிமைகள் அவையிலேயே திரும்பத்திரும்ப இதனை வலியுறுத்தி வருகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூட, தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு, "மக்கள் தமது உறவுகளை நினைவுகூர உரிமை உண்டு. அது மறுக்கப்பட முடியாது" என தெரிவித்தார்.

இருப்பினும், அவையெல்லாம் பேச்சளவில் தான் இருக்கின்றன.

அவரின் பொலிஸ் கட்டமைப்பு அதற்கு எதிராக மிக முரட்டுத்தனமாக தமிழ் மக்களின் ஆன்மாவையே சீண்டிப் பார்க்கும் விதமாக அடக்குமுறைத் திமிருடன் இப்படி நடந்து கொள்கின்றது.

இன்னொரு கோட்டாபய ராஜபக்ஷவின் அராஜக ஆட்சியையே இந்தச் செயற்பாடு மூலம் ரணில் விக்கிரமசிங்கவும் இங்கு நிலை நிறுத்த முயலுகின்றாரோ என்ற சந்தேகம் நமக்கு எழுகின்றது என தெரிவித்துள்ளார். (நி)

# இலங்கையர்களுக்கு ஜப்பானில் புதிய தொழில் வாய்ப்பு

(டோக்கியோ)

ஜப்பானில் புதிய தொழில் வாய்ப்புகளுக்கான சந்தர்ப்பங்களை இலங்கையர்களுக்கு வழங்க அந்த நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, கட்டட சுத்திகரிப்புத் துறையில் புதிய தொழில்வாய்ப்புக்களை இலங்கையர்களுக்கு பெற்றுக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங் கைக்கான ஜப்பான் தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நிர்மாணத் துறை, விமான நிலைய தரை சுத்தி கரிப்பு, தங்குமிட தொழிற்துறை உள்ளிட்ட 7 துறைகளுக்காக இலங்கையர்களை இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழில் வாய்ப்புகளுக்காக ஜூன் மாதம் 5 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என தூதரகம் அறிவித்துள்ளது.

மேலும் ஜப்பானில் இதுவரை இலங்கையர்களுக்கு 37 000 தொழில்வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மாணவர்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் விஞ்ஞான பாடத்திற்கு விசேட புள்ளி முறைமை

## கல்வி அமைச்சர் சபையில் தெரிவிப்பு

(கொழும்பு)

இடம்பெற்றுவரும் கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் விஞ்ஞான பாட வினாத்தாள் தொடர்பில் மாணவர்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் புள்ளி முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு உரிய புள்ளிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்ட பிரிவுகளிலிருந்து விஞ்ஞான பாடத்துக்கு 12 புள்ளிகளைக் கொண்ட வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கற்பிக்காத பாடத்திலிருந்து கேள்வி கேட்கும் போது பரீட்சாத்திகள் எவ்வாறு பதிலளிப்பார்கள்.

இவ்விடயம் தொடர்பில் கல்வியமைச்சு உரிய கவனம் செலுத்த வேண்டும் என ரோஹினி கவிரத்ன வலியுறுத்தினார்.

அதற்கு கல்வி அமைச்சர் பதிலளிக்கையில், விஞ்ஞான பாட வினாத்தாளில் இடம் பெற்றுள்ள தவறுகள் தொடர்பில் சிக்கல்கள் எழுந்துள்ள நிலையில், அந்த வினாத்தாள்களைத் தயாரித்த விரிவுரையாளர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

எவ்வாறு இருந்தபோதும் பரீட்சையில் விஞ்ஞான பாட வினாத்தாள் தொடர்பில் மாணவர்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் புள்ளி முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு உரிய புள்ளிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# துள்ளி எழுந்தது டில்லி

## • பிளே ஓப் வாய்ப்பை தக்கவைத்து அசத்தல்
## • வெளியேறும் தறுவாயில் லக்னோ

அபிஷேக் போரல், ஸ்ரப்ஸ் அரைச் சதம் கைகொடுக்க டில்லி அணி 19 ஓட் டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியாவில் 17ஆவது சீசன் ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. நேற்று டில்லியில் நடந்த போட்டியில் டில்லி, லக்னோ அணிகள் மோதின.

"பிளே ஓப்" வாய்ப்பை தக்கவைக்க, இதில் வென்றாக வேண்டிய கட்டாயத் தில், நாணயச்சுழற்சியில் வென்ற லக்னோ அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

டில்லி அணிக்கு அபிஷேக் போரல், ஜாக் பிரேசர் ஜோடி மோசமான ஆரம்பம் கொடுத்தது. அர்ஷத் கான் வீசிய போட்டியின் 2ஆவது பந்தில் பிரேசர் "டக்" அவுட்டாகி வெளியேறினார். பின் போரல், ஷாய் ஹோப் இணைந்தனர். அர்ஷத் வீசிய மூன்றாவது ஓவரில் ஓட்ட மழை பொழிந்தார் போரல்.

முதல் மூன்று பந்துகளில் இரண்டு பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்த இவர், கடைசி பந்தையும் பவுண்டரிக்கு அனுப்ப, 21 ஓட்டங் கள் கிடைத்தன. மறுபக்கம் யூத்வித் சிங் வீசிய நான்காவது ஓவரில், ஹோப் தன் பங் கிற்கு 2 பவுண்டரி, ஒரு சிக்சர் உட்பட 16 ஓட்டங் கள் விளாசினார். நவீன் உல் ஹக் ஓவ ரில், போரல் 2 சிக்சர், ஒரு பவுண் டரி என அடிக்க 17 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. டில்லி அணி "பவர் பிளே" ஓவர் (6) முடிவில் 73/1 ஓட்டங்கள் குவித்தது. தொடர்ந்து அசத்திய போரல், 21 ஆவது பந்தில் அரைச் சதம் எட்டினார். இரண் டாவது விக்கெட்டுக்காக 92 ஓட்டங்கள் சேர்த்த போது, ரவி பிஷ்னோய் சுழ லில், ராகுலிடம் "பிடி" கொடுத்து வெளியேறினார் ஷாய் ஹோப் (38). டில்லி அணி 11 ஓவர்களில் 111/2 ஓட்டங்களை எடுத்தது.



**ஸ்ரப்ஸ் "வேகம்"**

33 பந்துகளில் 58 ஓட்டங்கள் எடுத்த போரல், நவீன் உல் ஹக் "வேகத்தில்" வீழ்ந்தார். இதன் பின் அணியின் ஓட்டவேகம் குறைந்தது. குர்னால் பாண்ட்யா வீசிய 14வது ஓவரில் 2 பவுண்டரி அடித்து நம்பிக்கை கொடுத் தார் ரிஷாப் பன்ட். அர்ஷத் ஓவரில் ஸ்டப்ஸ், ஒரு சிக்சர், 2 பவுண்டரி அடித்து ஓட்ட வேகத்தை அதிகரித்தார்.

மறுபக்கம் ரிஷாப் (33) ஆட்ட மிழக்க, மீண்டும் ஸ்கோர் குறைந்தது. கடைசி நேரத்தில் ஸ்டப்ஸ், பவுண்டரி, சிக்சர் என விளாசி டில்லி ரசிகர்களுக்கு உற்சாகம் கொடுத்தார். இவர் 22 ஆவது பந்தில் அரைச்சதம் கடந் தார்.

20 ஓவர்களில் டில்லி அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 208 ஓட்டங் களைக் குவித்தது.

ஸ்ரப்ஸ் (57), அக்சர் படேல் (14) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**பூரன் ஆறுதல்**

லக்னோ அணிக்கு ராகுல் (5), குயின்டன் (12) ஜோடி சுமார் ஆரம்பம் தர, ஸ்ராய்னிஸ் (5), தீபக் ஹூடா (0) ஏமாற்றினர். படோனி (6), குர்னால் பாண்ட்யா (18) நிலைக்கவில்லை. பூரன் 27 பந்தில்61 ஓட்டங்கள்எடுத்தார். அர்ஷத் கான் (58) கடைசி நேரத்தில் போராடிய போதும் வெற்றிக்கு போதவில்லை.

20 ஓவர்களில் லக்னோ அணி 189/9 ஓட்டங்கள்எடுத்து தோல்வியடைய, "பிளே ஓப்" வாய்ப்பு ஏறக்குறைய முடிவுக்கு வந்தது.

# பாகிஸ்தான் பதிலடி

## ரிஸ்வான், ஜமான் அரைச்சதம்



ரிஸ்வான், பகார் ஜமான் அரைச்சதம் கடந்து கைகொடுக்க பாகிஸ்தான் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அயர்லாந்துக்கு பதிலடி கொடுத்தது.

அயர்லாந்து சென்றுள்ள பாகிஸ்தான் அணி, அங்கு 3 போட்டிகள் கொண்ட "ரி20" தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் அயர்லாந்து வென்றிருந்த நிலையில், 2ஆவது போட்டி டப்ளினில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

அயர்லாந்து அணிக்கு பால்பிர்னி (16), அணித் தலைவர் போல் ஸ்டிர்லிங் (11) ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. லார்கன் டக்கர் (51) அரைச்சதம் கடந்தார். ஹரி டெக்டர் (32), கர்டிஸ் கேம்பர் (22), கரேத் டெலானி (28*) ஓரளவு கைகொடுத்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் அயர்லாந்து அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் ஷஹீன் அப்ரிடி 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

சவாலான இலக்கை விரட்டிய பாகிஸ் தான் அணிக்கு அணித் தலைவர் பாபர் ஆசம் (0) ஏமாற்றினார். பின் இணைந்த மொஹமட் ரிஸ்வான் (75*), பகார் ஜமான் (78) ஜோடி நம்பிக்கை கொடுத்தது. மார்க் அடேர் பந்தை சிக்சருக்கு அனுப்பிய ஆசம் கான் வெற்றியை உறுதி செய் தார்.

பாகிஸ்தான் அணி 16.5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 195 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

3 போட்டிகள் தொடர் 1-1 என சமநிலை அடைந்தது. ஆட்டநாயகன் விருதை பாகிஸ்தானின் ரிஸ்வான் வென்றார்.

## அம்பாறையில்...

ஆலய முன்றலில் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங் கத்தினர் பொதுமக்களுடன் இணைந்து முள்ளி வாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சம்பவ இடத்துக்கு வருகை தந்த பெரியநீலாவணை பொலி ஸார் கல்முனை நீதிவான் நீதிமன்றத் தடை உத்தரவைக் காண்பித்து குறித்த நிகழ்வை நிறுத்துமாறு தடையேற் படுத்தினர்.

இவ்வாறான நிலையில் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கலைச் செய்ய முடியாத ஏற்பாட்டாளர்கள் அங்கி ருந்து வெளியேறி கல்முனை மனித உரிமை ஆணைக்குழுவுக்குச் சென்று தமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர் பில் முறைப்பாடு செய்தனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள் 01.05.2024-13.04.2025



**சனி பகவானை இராசிநாதனாகக் கொண்ட கும்ப இராசி வாசகர்களே!**

நீங்கள் உழைப்பின் மூலம் உன்னத நிலையை அடைபவர்கள். கிரகநிலை - தைரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். உங்களது அஷ்டம ஆயுள் ஸ்தானம் - தொழில் ஸ்தானம் - விரய ஸ்தானம் ஆகியவற்றைப் பார்க்கிறார்.

**மேஷத்தில் இருந்து ரிஷபத்துக்கு:** நிகழும் மங்களகரமான ஸ்வஸ்தி ஶ்ரீகுரோதி வருஷம் உத்தராயணம் வஸந்த ரிது சித்திரை மாதம் 18ஆம் நாள் இதற்குச் சரியான ஆங்கில திகதி 01.05.2024. அன்றைய தினம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியும் - புதன்கிழமையும் - திருவோண நட்சத்திரமும் - சுப நாம யோகமும் - பவ கரணமும் - சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் மாலை 5.01 இற்கு துலாம் லக்னத்தில் குரு பகவான் மேஷ இராசியிலிருந்து ரிஷப இராசிக்கு மாறுகிறார்.

**கும்பம் இராசியினருக்கான குருப் பெயர்ச்சி பலன்கள்:** இந்த குரு பெயர்ச்சியில் செய்தொழிலில் சிறிது பின்னடைவுகள் ஏற்பட்டாலும் மன உறுதியுடன் அவற்றை சமாளிப்பீர்கள். உங்களின் குறிக்கோளை மாற்றிக்கொள்ள மாட்டீர்கள். பொருளாதாரம் சீராக இருந்தாலும் பெரிய முதலீடுகளைச் செய்ய வழி ஏற்படாது. குடும்பத்தினர் ஓரளவுக்குத் தான் ஆதரவாக இருப்பார்கள். அதோடு கூட்டாளிகளும் பக்கபலமாக இருக்க மாட்டார்கள்.

எந்த முக்கிய முடிவையும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்து எடுக்கவும். மற்றபடி பொதுக்காரியங்களில் ஈடுபட்டு நல்ல விஷயங்களைக் கற்றுக் கொள்வீர்கள். அனுபவஸ்தர்களின் அறிவுரைகளைக் கேட்டு அதற்கேற்றபடி தேவையான மாறுதல்களைச் செய்வீர்கள். அதனால் அநாவசிய எண்ணங்களையும், சிந்தனைகளையும் மனதிலிருந்து அகற்றவும். பழைய தாக்கங்களை மறக்க முயற்சி செய்யுங்கள். மனோபலத்தை அதிகரிக்க அமைதியாகவும் டென்ஷன் இல்லாமலும் இறைவனின் திருநாமங்களை உச்சரித்து வாருங்கள். சிலருக்கு புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.

குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். முன்கூட்டியே யோசித்து உங்கள் செயல்களை சிறப்பாக முடித்து விடுவீர்கள். உங்கள் மனதில் உள்ளதை சுருங்கச் சொல்லி சரியாக விளக்கும் ஆற்றல் உண்டாகும். கிணற்றுத் தவளையாக இருந்தவர்கள் வெளியூர், வெளிநாட்டுக்குப் பயணம் மேற்கொள்வார்கள். சமுதாயத்திற்கு ஏதாவதொரு வகையில் சேவை செய்து பெயரும், புகழும் பெறும் யோகம் உண்டாகும். குறைவான உடல் உழைப்புக்குக்கூட நிறைவான வருமானம் கிடைக்கும். இல்லத்தில் குதூகலம் நிறையும். ஆன்மீகம், தத்துவம் போன்றவற்றில் ஈடுபடுவீர்கள். ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களிலிருந்து வருமானம் வரத் தொடங்கும்.

குடும்பத்திலும் வெளியிலும் உங்களின் செல்வாக்கு உயரும். இல்லத்திற்குத் தேவையான ஆடம்பரப் பொருட்களை வாங்குவீர்கள். அரசு அதிகாரிகளுடனான உங்கள் தொடர்பு அனுகூலமான திருப்பங்களைக் கொண்டுவந்து சேர்க்கும். அதேநேரம் மனதில் கற்பனைப் பயங்களும் உண்டாகலாம். அவ்வப்போது எதையோ இழந்துவிட்டது போன்ற மனக் கவலைகளுக்கு ஆளாவீர்கள். கடினமான உழைப்புக்கு இடையே சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். இந்தக் காலகட்டத்தில் சமுதாயத்தில் முக்கியஸ்தர் என்கிற அந்தஸ்தைப் பெறுவீர்கள்.

உத்தியோகத்தர்கள் அனைத்து வேலைகளையும் திருப்திகரமாக முடிப்பீர்கள். வருமானம் படிப்படியாக உயரும். மேலதிகாரிகள் உங்களுக்கு சாதகமாகவும் பக்கபலமாகவும் நடந்துகொள்வார்கள். மேலும் அலுவலக வேலைகளில் பளு இருக்காது. விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். புதிய பயிற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு இது லாபகரமான பெயர்ச்சியாக அமைகிறது. பொருட்களின் விற்பனை நல்ல முறையில் நடக்கும். வாடிக்கையாளர்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப விற்பனை முறைகளைக் கையாளுவீர்கள். என்றாலும் கூட்டாளிகளை அதிகம் நம்ப வேண்டாம்.

அரசியல்வாதிகள் சிரமமின்றி வெற்றிகளைப் பெறுவீர்கள். சிலர் புதிய பதவிகளில் அமர்வீர்கள். தொண்டர்களின் ஆதரவும் கட்சி மேலிடத்தின் ஆதரவும் இருப்பதால் உங்களின் எண்ணங்கள் நிறைவேறும். புதிய பயணங்களை மேற்கொள்வீர்கள்.




கலைத்துறையினருக்கு பண வரவு திருப்திகரமாக இருக்கும். கை நழுவிப்போன ஒப்பந்தங்கள் உங்களைத் தேடி வரும். உங்களின் முயற்சிகள் எதிர்காலத்தில் நல்ல பலனைத் தரும். பெண்மணிகளுக்கு கணவரின் அன்பும் பாசமும் அதிகரிக்கும். புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். மனதிற்கினிய சுற்றுலா சென்று வருவீர்கள். மாணவமணிகள் அதிகமாக உழைத்து நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள். உள்ளரங்கு விளையாட்டுகளில் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஆதரவுடன் உங்களின் கோரிக்கைகள் நிறைவேறும்.

## அநாவசிய எண்ணங்களையும், சிந்தனைகளையும் மனதிலிருந்து அகற்றவும்

**அவிட்டம் - 3, 4 பாதங்கள்:** இந்தக் குரு பெயர்ச்சியால் நீங்கள் செய்த வேலைகளை மற்றவர்கள் செய்ததாகக் கூறி நற்பெயர் எடுத்துக் கொள்வார்கள். கவனம் தேவை. வியாபாரிகள் லாபம் ஈட்டுவதில் கவனம் செலுத்துவர். உடனிருப்பவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு கவனமுடன் செயற்படுவது நன்மை தரும். வியாபாரம் தொடர்பான அலைச்சல் ஏற்படலாம். வெளியூர் பயணங்களால் லாபம் அடைவீர்கள். லாபத்திற்காக காத்திருக்கும் விவசாயிகள் மகிழ்ச்சி அடையும்படியான விற்பனை இருக்கும். உடனிருப்பவர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. மற்றவர்களை அனுசரித்து செல்வது நல்லது. வேலையில் திருப்தி உண்டாகும். பிள்ளைகளின் கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சதயம்:** இந்த குரு பெயர்ச்சியால் எந்த காரியத்திலும் கவனம் தேவை. பெரியவர்களிடம் நற்பெயர் எடுத்து மகிழ்ச்சி காண்பீர்கள். மனம் தெளிவடையும். எல்லா வகையிலும் நல்லதே நடக்கும். பணவரத்து அதிகரிக்கும். எதிர்ப்புகள் விலகும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். விரும்பிய காரியங்களை செய்து சாதகமான பலன் கிடைக்க பெறுவீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர் பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வியாபார போட்டிகள் குறையும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் விரிவாக்கத்திற்கு தேவையான பண உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்க பெறுவார்கள்.

**பூரட்டாதி** - 1. 2. 3 பாதங்கள்: இந்த குரு பெயர்ச்சியால் குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் சொற்படி நடப்பது மனதுக்கு திருப்தி தரும். பிள்ளைகள் கேட்பதை வாங்கிக் கொடுத்து சந்தோஷம் காண்பீர்கள். இடம், வாகனம் வாங்கும் எண்ணம் மேலோங்கும். அதற்கான காரியங்களையும் செய்ய ஆரம்பிப்பீர்கள். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். எடுத்த காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக நினைத்திருந்த ஆன்மீக தலங்களுக்குச் சென்று பலனடைவீர்கள். வெளியூர் பயணங்கள் மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும்.

**பரிகாரம்:** விநாயக பெருமானை வணங்க எல்லா துன்பங்களும் நீங்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும் ; சிறப்பு **பரிகாரம்:** சனிக்கிழமைதோறும் ஶ்ரீகணபதிக்கு தேங்காய் மாலை சாத்தி வழிபடவும் ; சொல்ல வேண்டிய மந்திரம்: "ஓம் ஸம் சனைச்சராய நம" என்ற மந்திரத்தை தினமும் 11 முறை சொல்லவும் ; **அதிஷ்ட எண்கள்:** 1.4.6.9

அதிஷ்ட ஹோரைகள்: சூரியன், செவ்வாய், சுக்கிரன்

அதிஷ்ட திசைகள்: மேற்கு, வடக்கு

அதிஷ்ட கிழமைகள்: ஞாயிறு, செவ்வாய், வெள்ளி

(தொடரும்)

# இராசிபலன்

**15.05. 2024**
**வைகாசி 02, புதன்கிழமை**
**சப்தமி முற்பகல் 7.21 மணிவரை**

**ஆயிலியம் பிற்பகல் 6.07 மணிவரை**
**சுபநேரம் 4.28-5.53 மணிவரை**
**இராகுகாலம் 11.53-1.23 மணிவரை**

**சந்திராஷ்டமம் - கேட்டை, மூலம்**

**வளவன்**




அழகு சாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், பயணங்கள் கைகூடும்.




சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழிலில் போட்டிகள் மாறும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.




கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், நாவன்மையால் நல்ல பெயர்கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




கற்பனை மிகுதியான நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், விருப்பங்கள் நிறைவேற விரதம் வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள்.




குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, விருந்தினர் வருகையுண்டு, சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், புதிய பெருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீகள், போசன சுகமுண்டு.




செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், குடும்ப மகிழ்ச்சி கூடும்நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.




வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, விருந்தினர் வருகையுண்டு, தொழில்நலன்கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பயணங்களால்பலண்டு.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.




பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோக்கும் நாள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன நன்மையுண்டு.




குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், கடன்சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.




நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்த காரியம் இனறு நடைபெறலாம், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

தவறுகள் [illegible] புத்திசாலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) கொடியேற்றம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) வருடாந்தத் திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 22 ஆம் திகதி புதன் கிழமை காலை தேர்த்திருவிழாவும், 23 ஆம் திகதி வியாழக் கிழமை காலை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (நி-33)

## பளுதூக்கலில் சிறந்த வீராங்கனையாக அபிஷாக்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டு திணைக்களம் நடத்திய வடமாகாண பளுதூக்கல் போட்டியில் பெண்கள் பிரிவில் சிறந்த வீராங்கனையாக யாழ் மாவட்ட அணி வீராங்கனை ரி.அபிஷாக் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மாவட்ட அணிகளுக்கிடையிலான வடமாகாண பளுதூக்கல் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். துரையப்பா உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் பெண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட அணியை பிரதிநிதித்துவம் செய்த ரி.அபிஷேக் 55 கிலோ எடைப் பிரிவில் சினெச் முறையில் 64 கிலோ பளுவையும், கிளின் அன் ஜக் முறையில் 85 கிலோ பளுவையும் மொத்தமாக 149 கிலோ பளுவை தூக்கி சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டார். (நி-6-90)





குருநகர் ஜேம்ஸ் வோறியஸ் சமூக மேம்பாட்டுக் கழகம் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் அனுசரணையுடன் மாபெரும் இரத்த தான நிகழ்வு குருநகர் கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

(படம்: ஏணெஸ்ற்)

## வல்வெட்டித்துறையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி பவனியும் நேற்று செவ்வாய்க்கிழமை வல்வெட்டித்துறை பகுதியில் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பூர்வீக வீட்டிற்கு அருகில், ஆலடிச் சந்தியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

அதன் போது, முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தியில் முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்து இரு மாவீரர்களின் தந்தையான தங்கேஸ்வரனால் பொதுச்சுடரேற்றிவைக்கப்பட்டு தொடர்ச்சியாக ஈகைச் சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. (நி-33)


## பண்ணிசை பயிற்சி நெறிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பண்ணிசைப் பயிற்சிநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மன்னார் திருக்கேதீச்சரம் கௌரியம்பாள் தமிழ் மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறும்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய.அநிருத்தனன் தலைமையில் அமெரிக்க ஹவாய் சைவ ஆதீன ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் திருமுன்னிலையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா, சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன், மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் இந்நிகழ்வில் தெல்லிப்பழை சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி. ஆறு திருமுருகன் வாழ்த்துரை வழங்கவுள்ளார். (நி)

## தமிழினப்படுகொலையை நினைவு கூர்ந்து யாழ்.பல்கலையில் குருதிக் கொடை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவேந்தி குருதிக் கொடை நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.பல்கலைக்கழக மாணவர் கட்டடத் தொகுதியில் முன்னெடுக்கப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள், விரிவுரையாளர்கள் ஏனைய பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் குருதிக் கொடையில் உணர்வுடன் பங்கேற்றனர். (நி-33)



புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய இளைஞர் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த இரத்த தான நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் பல பெண்கள் உட்பட 40 பேர் குருதிக் கொடை வழங்கி [illegible] வழங்கி உள்ளனர்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 160 | 100-150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 80 | 70-90 | 150 |
| தக்காளி | 180 | 170 | 170 | 140 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 140 | 100-130 | 200 |
| கோவா | 180 | 200 | 170 | 160 | 200 |
| கரட் | 350 | 230 | 220 | 200 | 280 |
| பூசணி | 100 | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 180 | 150 | 130 | 100 | 200 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 50-80 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 200-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 250 | 400 | 450 | 250 | 400 |
| வெண்டக்காய் | 100 | 250 | 120 | 170 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 400 | 600 | 450 | 600 | 400 |
| லீக்ஸ் | 250 | 300 | 300 | 250 | 350 |
| பீற்றூட் | 200 | 250 | 350 | 300 | 400 |
| கறிமிளகாய் | 200 | 200 | 250 | 150 | 300 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 600 | 400-600 | 600 |
| போஞ்சி | 300 | 400 | 400 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 160 | 150 | 160 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 40-60 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1000 | 1000 | 1000-1350 | 1500 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 80 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 400 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 180 | 100 | 160 | 80 | 280 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 120 | 60 |
| வல்லாரை | 60 | 180 | 80 | 60 | 80 |
| [illegible] | [illegible] | [illegible] | 80 | [illegible] | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லங்கா மஹறால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (750)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615 6719

Western Union, MoneyGram, Ria Money Transfer ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974


# காக்கை தீவுப் பகுதியில் தீயிட்டு எரிக்கப்பட்ட வீதியோரக் குப்பைகள்

## பயணிகள் அசௌகரியம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காக்கைதீவு பகுதியில் வீதியோரத்தில் காணப்படும் கழிவுப் பொருட்களினால் அவ்வீதியூடான பயணிகள் பெறும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவித்துள்ளனர்.

காக்கைதீவு மீன் சந்தையில் இருந்து சுமார் 150 மீற்றர்கள் தொலைவிலுள்ள வீதியோரத்தில் அடையாளம் தெரியாத நபர்களினால் இரவு நேரத்தில், வைத்தியசாலை கழிவுகள், வியாபார நிலையங்களின் கழிவுகள், வீட்டுக்கு கழிவுகள் உள்ளிட்ட பல கழிவுப் பொருட்களை இட்டுச்செல்கின்றனர்.

இதன் காரணமாக அந்த கழிவுகளால் வீதியெங்கும் துர்நாற்றம் வீசுவதாகவும் பயணிகள் கூறியுள்ளனர்.

இந்நிலையில் நேற்று அங்கு வந்த யாழ்ப்பாண மாநகரசபை ஊழியர்கள் அவ்விடத்திலிருந்த கழிவுப் பொருட்களை தீ மூட்டியுள்ளனர்.

இதனால் ஏற்பட்ட புகை மண்டலத்தினால் வீதியால் செல்கின்ற பயணிகள் அசௌகரியங்களையும் எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே, குறித்த பகுதியில் கழிவுப் பொருட்களை இடுபவர்களை கண்டுபிடித்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி)


# ST.JOHN'S COLLEGE, JAFFNA VACANCY

Applications are hereby invited from qualified persons for the following vacancies:

**Teacher - Bio systems Technology for A/L Classes**

Please send your complete CV with photocopies of relevant certificates and the contact details of two non-related referees by registered post to reach us before 31st May 2024 to the address below. only shortlisted candidates will be called for an interview.

The Principal,
St.John's College
Jaffna.

(C-0363)



# கேள்வி அறிவித்தல்
## சபை நிதி மற்றும் பராமரிப்பு வேலைத்திட்டங்கள்-2024
## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.


1. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் சபை நிதி மற்றும் பராமரிப்பு நிதிகளின் ஒரு பகுதி குறித்த வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் விலைக்கேள்வியாளர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டுமான அமைப்புக்கான சிடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 04 (Section IV) இலும் மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037 , தொலைநகல் 021-205-0036 ,E-Mail: pallaips@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் 15.00 மணி வரை 15.05.2024 ஆம் திகதியிலிருந்து 29.05.2024 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் இடத்திலிருந்து 15.05.2024 .ஆம் திகதியிலிருந்து 29.05.2024 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு 30.05.2024ஆம் திகதி மாலை 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | நிதி மூலம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/CF/W/04/2024 | Renovation of Puloppalai sub office division | Council | 1.67 Mn | 45 நாட்கள் | C9 or C8 | 25000.00 | 15.08.2024 |
| NP/14/45(3)/PL/CF/W/06/2024 | Reconstruction of Muruganandhanagar Road | Council | 1.69 Mn | 45 நாட்கள் | C9 or C8 | 25000.00 | 15.08.2024 |
| NP/14/45(3)/PL/CF/W/10/2024 | Renovation of Muhamalai Sub office Road | Council | 0.84 Mn | 45 நாட்கள் | C9 or C8 | 12000.00 | 15.08.2024 |
| NP/14/45(3)/PL/PSDG/W/02/2004 | Renovation work for Kachcharveli Main Road | Maintenance | 0.84 Mn | 45 நாட்கள் | C9 or C8 | 12000.00 | 15.08.2024 |

10. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 22.05.2024 திகதி காலை 10.30 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
11. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

தலைவர்,
பெறுகைக்குழு,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.

(ரி-0364)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினால் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் நிகழ்த்தப்பட்ட தமிழினப் படுகொலையை நினைவு கூரும் வகையில், முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட நுழைவாயிலில் வழங்கி வைக்கப்பட்டது. (நி)

# உரும்பிராய் மேற்கிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உரும்பிராய் மேற்கு இளைஞர்களால் தியாகி பொன் சிவகுமாரன் சிலை முன்பாக முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் மூன்றாவது நாளான நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இதில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி மக்கள் பேரியக்க ஒருங்கிணைப்பாளரும் சிவகுரு ஆதீன முதல்வருமான வேலன் சுவாமிகள் மற்றும் உரும்பிராய் மேற்கு இளைஞர்கள், கிராம மக்கள், பயணிகள் என பலரும் கலந்து கொண்டனர். (நி)

# எலுமிச்சையின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சந்தையில் எலுமிச்சையின் விலை அதிகரித்துள்ளது.

இடைத்தரகர்களின் மோசடியான நடவடிக்கைகள் காரணமாக இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக உற்பத்தியாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

விவசாயிகளிடமிருந்து மிகக் குறைந்த விலையில் எலுமிச்சம்பழம் கொள்வனவு செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்காரணமாக தமது உற்பத்திகளுக்கான உரிய விலை கிடைக்கவில்லை என எலுமிச்சை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் சந்தையில் ஒரு கிலோகிராம் எலுமிச்சை 2,200 ரூபாவுக்கும் அதிகமான விலையில் விற்பனை செய்யப்படுவதாக அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# விளம்பரப் பலகை வீழ்

# மும்பையில் 14 பேர் உயிரி

## 60 இற்கும் மேற்பட்டோர் காயம்

(டில்லி)


**இந்தியாவின் மும்பை நகரில் விளம்பரப் பலகை விழுந்ததில் 14 பேர் உயிரிழந்துள்ளதுடன் 60 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்,**



மும்பை நகரில் வீசிய பலத்த காற்றினால் இந்த விளம்பரப் பலகை இடிந்து விழுந்ததாக இந்திய ஊட கங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

எரிபொருள் நிரப்பு நிலை யத்திற்கு அருகில் பொருத் தப்பட்டிருந்த இந்த விளம்பரப் பலகை இடிந்து வீழ்ந்துள்ளதுடன், பல வாகனங்களும் பாரிய சேதங்களுக்கு உள்ளாகி யுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

இந் நிலையில் குறித்த விளம்பரப் பலகை சட்டப் பூர்வ அனுமதியுடன் நிறு



வப்பட்டுள்ளதா என்பது குறி த்து விசாரணை நடத்த மகாராஷ்டிர

முத

மை

# அடுக்குமாடி குடியிருப்பு மீது உக்ரைன் வான் தாக்குதல்

## 15 பேரின் சடலங்கள் இதுவரை மீட்பு

(மொஸ்கோ)

உக்ரைன் மீது ரஷ்யா மேற் கொண்டு வரும் இராணுவ நட வடிக்கை 2 ஆண்டுகளை கட ந்து நீடித்து வருகின் றது

அந்நிலையில் ரஷ் யாவின் பெல்கோரட் நகரில் உக்ரைன் நடத்திய வான் தாக்குதலில் 10 தளங்கள் கொண்ட அடுக்கு மாடிக்குடியிருப்பு கட்டடம் இடிந்து விழு ந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது

அந்தக் குடியிருப்பில் வசித்தவர்கள் பலர் கட்டட இடிபாடுகளில் சிக்கியு ள்ளதுடன் மீட்பு பணிகள் நடைபெறுகின்றன.

நேற்றுக் காலை நிலவர



ப்படி 15 பேர் உயிரிழந்துள் ளனர் என தெரிவிக்க ப்பட்டுள்ளது.

மேலும் அருகில் உள்ள குடியிருப்பு கட்ட டங்களும் இடிந்து விழும் என்ற அச்சம் ஏற்பட்ட நிலையில் அந்தக் குடியிரு ப்பில் இருந்த மக்கள் வெளியேற்றப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக் கது. (நி)

# போலந்து வணிக வள


## சுமார் ஆயிரம் கடை

(வார்ஷா)

போலந்தில் வணிக வளாகத்தில் ஏற்பட்ட பயங் கர தீ விபத்தில் ஆயிரத் திற்கும் மேற்பட்ட கடை கள் எரிந்து சாம்பலானதில் பல கோடி ரூபாய் மதிப் பிலான பொருட்கள் சேதம் அடைந் தன.

போலந்து தலைநகர் வார்ஷாவில் மேரிவில் ஸ்கா 44 என்ற பெய ரிலான மிகப் பிரமாண்ட மான வணிக வளாகம் உள்ளது. அந்நாட்டின் மிகப்பெரியதான அந்த வணிக வளாகத்தில் 1,400 இற்கும் மேற்பட்ட கடைகள் உள்ளன.

இங்குள்ள ஒரு கடையில் நேற்று மாலை



திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

அதை உடனடியாக கட்டுப் படுத்த முடியாததால் அது மள மளவென அடுத்தடுத்த கடைக ளுக்கும் விரைவாகப் பரவியது.

இதனால் அங்கிருந்த கடை கள் அனைத்தும் அடுத்தடுத்து தீப்பிடித்து எரிந்தது. அந்தக்

கடை
யே
அப்
பு
த்த
அ
யில்
உட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ழுந்து


ரிழப்பு

யம்



ந்து முதல்வர் உத்தரவிட்டுள்ள
டிர மையும் குறிப்பிடத்தக்கது.(நி)

# அமெரிக்க ஜனாதிபதிக்கு ஹமாஸ் கடும் கண்டனம்



(வோஷிங்டன்)
பணயக் கைதிகளை விடுவிப்பது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் தெரிவித்த கருத்துக்கு ஹமாஸ் படையினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் நடந்த தாக்குதலின் போது ஹமாஸ் அமைப்பினரால் பணயக் கைதிகளாக பிடித்து செல்லப் பட்டவர்களை விடுவித்தால் காசாவில் நாளையே போர் நிறுத்தம் சாத்தியமாகும் என ஜோபைடன் அண்மையில் தெரிவித்தார்.

இந்நிலையில் ஜோபைடனின் இக் கருத்துக்கு ஹமாஸ் அமைப்பினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த அமைப்பு சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் அமெரிக்க ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டை தாம் கண்டிப்பதாகவும், பல சுற்று களாக நடந்து வரும் பேச்சு வார்த்தையில் ஒரு பின்னடைவாக இதை தாம் கருது வதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (நி)

# சிவப்பு உதட்டு சாயத்திற்கு தடைவிதித்த கிம் ஜாங் உன்

## வடகொரியாவில் விநோத அறிவிப்பு

(பியாங்யாங்)
வட கொரியாவில் பெண்கள் சிவப்பு நிற உதட்டுச் சாயத்தை பூசிக் கொள்ள அந்த நாட்டு ஜனாதிபதி கிம் ஜாங் உன் தடை விதித்துள்ளார்.

இந்தத் தடையை மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

பிரபலமான அலங்கார பொருட்களுக்கு ஏற்கனவே ஜனாதிபதி தடை விதித்தார். தற்போது சிவப்பு நிற உதட்டுச் சாயத்திற்கும் தடை விதித்த தோடு இந்தத் தடையை மீறி னால் பெரும் தொகை அபராதமாக விதிக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளார்.

சிவப்பு வண்ணம் கம்யூனிசத்தின் ஆஸ்தான நிறமாக பார்க்கப் பட்டாலும் பெண்கள் பூசிக்கொள்ளும் உதட்டுச் சாயத்தை முதலாளித்துவத்தின் சின்னமாக வடகொரியா ஜனாதிபதி பார்ப்பதாக கூறப்படுகிறது. (நி)

# வளாகத்தில் தீ விபத்து

# டைகள் எரிந்து நாசம்



கடைகளில் இருந்து வெளியேறிய கரும்புகை காரணமாக அப்பகுதி முழுவதும் கரும் புகை மண்டலமாக காட்சியளித்தது.

அங்குள்ள கடைகளில் பணியில் இருந்தவர்கள் அனைவரும் உடனடியாக வெளியேறிய தால், யாருக்கும் காயம் ஏற்படவில்லை. 1000 இற்கும் மேற்பட்ட கடைகள் முற்றிலுமாக தீயில் எரிந்து சாம்பலாயின.

தகவல் அறிந்து நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 200 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் சென்று வணிக வளாகத்தின் பல்வேறு திசைகளில் இருந்தும் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

இந்தத் தீ விபத்தில் பல கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்கள் எரிந்து நாசமாகி இருப்பதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# கார்களை மோதித்தள்ளிய பேருந்து 11 பேர் ஸ்தலத்தில் பலி

## சுமார் 50 பேர் படுகாயம்

### பலி எண்ணிக்கை உயரலாம் என அச்சம்

(ஜகர்த்தா)
தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேஷியா மேற்கு ஜாவா மாகாணத்தைச் சேர்ந்த பாண்டுங் பகுதியில் நடந்த ஒரு பட்டமளிப்பு விழாவில் ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர்.



விழா முடிந்ததும் பேருந்து ஒன்றில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஜகர்த்தா பகுதியில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு திரும்பிக்கொண்டு இருந்தனர். அந்தப் பேருந்தில் மொத்தம் 61 பேர் பயணம் செயதனர்.

மலைகள் நிறைந்த பகுதியில் பேருந்து கீழே இறங்கிக் கொண்டு இருந்த போது திடீரென பிரேக் பழுதானதாக கூறப்படுகிறது. இதனால் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து மலையில் முன்னால் சென்று கொண்டிருந்த கார்கள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் மீது பயங்கரமாக மோதியது.

இந்தக் கோர விபத்தில் பேருந்தில் இருந்த 11 பேர் இடிபாடுகளுக்கு இடையில் சிக்கி சம்பவ இடத்திலேயே இறந்தனர். 50 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயத்துடன் உயிருக்கு போராடிக் கொண்டு இருந்தனர்.

இது பற்றி தகவல் அறிந்ததும் மீட்புப் படையினர் விரைந்து சென்று படுகாயம் அடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர்.பலியானவர்களில் 9 பேர் மாணவர்கள். ஒரு ஆசிரியர் மற்றும் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் என மொத்தம் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

படுகாயம் அடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாளைய நகரில் ‘சோதனை எலி’ மனிதர்கள்?

‘தொழில்நுட்ப வளர்ச்சியின் எல்லாக் கூறுகளையும் உள்ளடக்கியதாகக் கட்டமைக்கப்பட்டு வரும் “வோவன் சிட்டி” (Woven City), நாளைய நகரங்கள் எப்படி அமையும் என்பதற்கான சோதனைக்கூடமாக உருமாற, மனிதர்களே அங்கு சோதனை எலிகளாக மாறவிருக்கின்றனர்’ என்பது ஆச்சரியப்பட வைக்கிறது!

அந்த வகையில், கால இயந்திரமே இன்றி பயணப்பட வைக்கும் ஒரு ஸ்மார்ட் சிட்டியை, டொயோட்டா கார் நிறுவனம் ஜப்பானில் கட்டமைத்து வருகிறது. ஜப்பானின் ஃபியூஜி எரிமலையின் அடிவாரத்தில் தான், ‘வோவன் சிட்டி’ என்ற இந்தத் தொழில்நுட்ப உலகம் சுழல்வதற்காக ஆயத்தமாகிறது. ‘சமுதாயத்தை முன்னோக்கி நகர்த்த, இங்கு பைலட் பரிசோதனைகள், புதுமைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன’ என்கிறது அதன் வலைத்தளம். குறிப்பிட்ட எந்தத் தொழில்நுட்பம் இங்கு பரிசோதிக்கப்படவிருக்கிறது என்பது பகிரப்படவில்லை.

175 ஏக்கர் பரப்பளவில், அதிகமான பொருட்செலவில், ஒரு கார் நிறுவனம் இப்படிப்பட்ட மாதிரி நகரம் ஒன்றை உருவாக்குவதற்கான காரணம் என்ன தெரியுமா? இத்தனை பொருட்செலவும் உழைப்பும் டொயோட்டா தனது தானியங்கி கார்களுக்கான பரிசோதனையை நிகழ் உலகில் நிகழ்த்திப் பார்ப்பதற்காகத்தான். விஞ்ஞானத்தை, தொழில்நுட்பமாக மாற்றுவதிலுள்ள சிரமத்தை விட அதை நிஜ உலகில் நடைமுறைப்படுத்துவதில் தான் அதிக சவால்கள் அடங்கியிருக்கின்றன. அதைச் சமயோசிதமாக சமாளிப்பதற்கான வழி, நிஜ உலகில் அதற்கான விடைகளைத் தேடுவது மட்டுமே.



தானியங்கி கார், இன்னமும் 100 சதவிகிதம் ஓட்டுநரே இன்றிப் பயணிக்கும் நிலையை எட்டவில்லை. சோதனை அளவிலேயே இருக்கிறது. அதை மேம்படுத்துவதற்கான முயற்சியாக அவற்றின் இயக்கம் குறித்துப் பரிசோதிக்கையில், சிமுலேட்டர்ஸ் (Simulators) எனப்படும் மெய்நிகர் காட்சிகளை (Virtual Reality) உண்டாக்கி, அவற்றின் வாயிலாகவே தானியங்கி கார்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்கின்றனர்.

இந்த வழிமுறை, வீடியோ கேமுக்குப் பொருந்தலாம். ஆனால், தானியங்கி கார்கள் எதிர்காலத்தில் பயணிக்க வேண்டியது... ஓய்வற்ற சாலைகளில், உயிருள்ள மனிதர்களுக்கு மத்தியில். அப்படியிருக்க, அதை நிகழ் உலகில் சோதனை ஓட்டம் செய்து பார்ப்பதுதானே முறையானதாக இருக்கும்... அதைத்தான் “வோவன் சிட்டி” யில் டொயோட்டா செய்யப் போகிறது.

இங்கே அமைக்கப்பட்டிருக்கும் குடியிருப்புகள் - ஸ்மார்ட் வீடுகள். ஜப்பானின் பாரம்பரியம் மாறாமல் மரத்தால் செய்யப்பட்டிருப்பினும், உள்ளே அதன் ஒவ்வோர் அங்குலத்திலும் தொழில்நுட்பம் இழையோடியிருக்கிறது. செயற்கை நுண்ணறிவும், ரோபோக்களும் இணைந்து வீடுகளைத் தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும். அங்கு வசிக்கும் மனிதர்களின் உத்தரவுகளை விளக்கிலிருந்து வெளிவரும் பூதங்களாக நிறைவேற்றும். “கத்தி” திரைப்படத்தில் நடிகர் விஜய் டேபிளுக்கு அடியில் காட்டும் அண்டர்கிரவுண்ட் புளூ பிரின்ட் போல், அத்தனை வீடுகளையும் இணைக்கும் பைப்லைன் போன்ற அமைப்புகள் வீடுகளுக்குக் கீழே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பொருட்கள் வீடுகளுக்கு வந்து சேர்வதிலிருந்து, குப்பைகள் தானாகவே அகற்றப்படுவது வரை எல்லாமே தானாகத்தான்.

சாலைகளோ, ஒன்றினொன்று குறுக்கிடாதவாறு மூன்று வழிப்பாதையாக அமைந்திருக்கின்றன. ஒன்று பாதசாரிகளுக்கானது. மற்றொன்று பொதுவாகனங்களுக்கானது. இன்னொன்றுதான் ஹைட்ரஜனை எரிபொருளாகப் பயன்படுத்தும் E-Palettes எனப்படும் தானியங்கி கார்களுக்கானது. நகரத்தில் குடியிருப்பவர்கள் செய்யும் ஒன்லைன் சொப்பிங்குக்கான டெலிவரியை இதுதான் செய்யப்போகிறது. தனது பாதையில் பயணிப்பதோடு மட்டுமன்றி, மற்ற வழிப் பாதைகளிலுள்ள போக்குவரத்தையும், முன்னேறும் வாகனங்களையும், அதை ஓட்டும் மனிதர்களையும் இந்தத் தானியங்கி கார்கள் உற்று கவனிக்கும்.

உதாரணமாக, ஒரு சைக்கிள் பயணியின் முக மாற்றம், அவர் போக்குவரத்து நெரிசலில் நடந்துகொள்ளும் விதம், அவரது சராசரி வேகம் எனச் சகலத்தையும் உள்வாங்கும். இதை நிகழ்த்துவதற்காக, “வோவன் சிட்டி” யிலுள்ள வீடுகள், வாகனங்கள் மட்டுமல்ல, மனிதர்களும்கூட வயர் லெஸ் தொடர்பின் மூலமாக இணைக்கப்படுவார்கள். கமரா க்களும் சென்சார்களும் இரு புலன்களாக மாறி இதைச் சாத்தியமாக்குகின்றன.

இவை சேகரித்துத் தரும் அத்தனை தகவல்களும், தானியங்கி கார்களுக்கான உள்ளீடாகவும், அவை இயங்குவதற்கான மென்பொருளை இயற்றுவதற்கான படிநிலைகளை முடிவுசெய்வதற்கும் பயன்படுத்தப்படவிருக்கின்றன. சுருங்கச் சொன்னால், மக்களோடு இரண்டறக் கலந்து அவர்களது உடல் பாஷைகளை, வாகனங்களை இயக்குகையில் அவர்களது மனோநிலையைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ப தன்னைத் தகவமைத்துக் கொள்வதற்கான தானியங்கி கார்களின் தேடல் இது.

இதன் மூலமாக, இயல்பாக ஒரு போக்குவரத்தில் ஏற்படக்கூடிய இடையூறுகளிலிருந்து, சந்திக்க வேண்டிய சவால்கள் வரை என்னவென்பது டொயோட்டாவுக்குப் புரிய வரும். ஆக மொத்தம், தங்களது தானியங்கி கார்களை டெஸ்ட்ரைடு செய்ய மாநகரத்தையே நிர்மாணிக்கிறது டொயோட்டா. ஹைட்ரஜன் கார்களை பிரபலப்படுத்துவதற்கான முயற்சியாகவும் இதைப் பார்க்கலாம்.

ஜீரோ கார்பன் வெளியீடு, மொத்த நகரமும் சூரிய ஒளி, காற்று உள்ளிட்ட புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் மூலங்களால் இயங்குவது ஆகியவையெல்லாம் இதன்மீது ஓர் ஈர்ப்பை இயல்பாகவே கொண்டு வருகின்றன. என்றாலும், ‘மிகப்பெரும் மனிதப் பரிசோதனை’ (Mass Human Experiment) எனப் பெயரிடப்பட்டு 2,000 பேரை இந்த நகரத்தில் குடியமர்த்திச் செய்யப்படும் ஆய்வும் அதன் முடிவுகளும் ஒட்டுமொத்த உலக மக்களின் இயல்பைப் பிரதிபலிக்குமா என்பது கேள்விக்குரியதே.

மேலும், வோவன் சிட்டிக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கப்போவது, நீக்கமற நிறைந்திருக்கும் கமராக்களாலும், சென்சார்களாலும் பெறப்படும் தனிநபர் குறித்த தகவல்கள் எந்த அளவுக்கு இரகசியம் காக்கப்படும், அது வெளியே கசியாமல் இருப்பதற்கான உத்தரவாதம் இருக்கிறதா என்பது.

இந்த ஆண்டின் முடிவில் டொயோட்டா ஊழியர்கள் உள்ளிட்ட 360 பேரை முதற்கட்டமாக இங்கு குடியமர்த்தவிருக்கின்றனர். ஒட்சிசனால் உயிரூட்டப்பட்ட மனிதர்களும், ஹைட்ரஜனால் இயக்கப்படும் வாகனங்களும் இணைந்து உயிர்ப்போடு மாறப்போகும் வோவன் சிட்டியில், டெஸ்ட் ரைடு செல்ல நீங்கள் தயாரா?

# இன்று ஒரு தகவல் 124



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## ஒவ்வாமை

எனக்குத் தெரிந்த நண்பர் இருக்கிறார். அவர் இறப்பர் செருப்பை பார்த்து விட்டால் இறப்பர் மாதிரியே துள்ளித்துள்ளி துர ஓடுவார். என்ன விடயம் என்று விசாரித்தேன். அது எனக்கு ஒத்துக் கொள்ளாது அலர்ஜி என்றார். சில பேருக்கு நல்லெண்ணையை ஆகாரத்திலே சேர்த்துக் கொண்டால் உடம்பை சொரிந்து விடுவதற்கு நான்கு ஆட்கள் தேவை. சொறி வந்துவிடும். ஒரு மனிதனுக்கு உணவு.... அதுவே இன்னொரு மனிதனுக்கு விஷம் என்றார் ஒரு தத்துவஞானி. அவருடைய பெயர் லுக்ரிஷியன். முதல் நூற்றாண்டிலேயே அவர் இதை சொல்லி விட்டார். அலர்ஜி பற்றி முதலிலே சொல்லப்பட்ட கருத்து இதுதான்.

இப்போது உள்ள மருத்துவ அறிஞர்கள் அலர்ஜிக்கு என்ன விளக்கம் கொடுக்கிறார்கள் தெரியுமா? ஒரு மனிதன் தன்னை சுற்றியிருக்கின்ற அபாயமில்லாத சில பொருட்களுடைய சில கொஞ்சமான மாறுபட்ட நிலைமையிலே கூட அதிகமான பாதிப்பு அடைகிறது. அதாவது Hyper Sensitivity என்று சொல்லுகின்றார்கள். அதாவது உடம்பின் இயல்பிற்கு ஒத்துக்கொள்ளாத சில பொருள்களாலே ஏற்படுகின்ற பாதிப்பு அலர்ஜி. இந்த பாதிப்பு உடம்பிலே எத்தனையோ விதமாக இருக்கும். பொதுவாக சரும பாதிப்பு. ஆஸ்துமா அலர்ஜியினாலே வருகிறதா? சாப்பிடுகின்ற ஆகாரம் காரணமாக அலர்ஜி வருவது ஒரு வகை. வேறு வகையாகவும் இது வரலாம். காற்றிலே உள்ள தூசு, தும்பு இதையெல்லாம் சுவாசிப்பதனாலே சில பேருக்கு அலர்ஜி வரலாம்.

நாய்க்குடை-காளான் இதிலே உண்டாகின்ற ஒரு வகை கிருமிகள் கூட அலர்ஜிக்கு ஆதாரமாக இருக்கிறது உண்டு. கழுதை, குதிரை, நாய் இதனுடைய தோலிலேயிருந்து வருகின்ற கிருமிகளும் அலர்ஜியை ஏற்படுத்துகின்றன. சில வகையான இரசாயணப் பொருட்கள், பென்சிலின் ஸ்ட்ரெப்டோ மைசின், அஸ்பிரின் இதனாலே கூட ஆஸ்துமா ஏற்படலாம். லிப்ஸ்டிக், முகப்பவுடர், முகத்திலே பூசுகின்ற கிறீம் வகைகள், சோப்பு, கூந்தல் தைலம் இவையெல்லாம் கூட சில பேருக்கு ஒத்துக் கொள்வதில்லை. இதையெல்லாம் எடுத்துச் சொல்லி அதனாலே இது உனக்கு வேண்டாம் என்று சொன்னால் அதையும் சிலபேர் ஒத்துக்கொள்வது இல்லை. சில பேருக்கு டெரிலின் துணி ஒத்துக் கொள்ளாது. பிளாஸ்ரிக் இறப்பர் இவை யெல்லாம் சில பேருக்கு ஒத்துக் கொள்ளாது. அதனாலே ஒவ்வாமை ஏற்படுவதற்கான காரணம். எல்லோருக்கும் ஒரே மாதிரி இருப்பது இல்லை.

பொதுவாக மனித உடம்பிற்குள்ளே புகக்கூடிய எந்த நச்சுப் பொருளையும் எதிர்த்து அழிக்கக்கூடிய அணுக்கள் Antibodies உள்ளது. உடம்பிற்குள்ளே ஏதாவது நச்சுப்பொருள் அல்லது நச்சுக்கிருமி வந்து விட்டால் உடனே இந்த நுண் அணுக்கள் அதை அழித்து வெளியே தள்ளிவிடும்.

ஆனால் சில மனித உடம்பிலே என்ன நடக்கின்றது தெரியுமா? நச்சு எதிர்ப்பு அணு உடம்பை நச்சுக்கிருமியிடம் இருந்து காப்பாற்றுவதற்கு பதிலாக ஒவ்வாமைகளுக்கு உதவியாக மாறி விடுகிறது. நம்மில் சிலபேர் செய்வது மாதிரி. அதுதான் ஒவ்வாமை ஆகி விடுகிறது. எதிரி காலிலே விழுந்து விடுவார்கள் சில பேர் அது மாதிரி.

இந்த நச்சு எதிர்ப்பு அணுவுக்கு ரியாகின் என்று பெயர். ஆஸ்துமா மாதிரியா ஒவ்வாமை குளிர்காலத்தில் தான் அதிகமாக இருக்கும். சில விதமான ஒவ்வாமை உயிருக்கே ஆபத்தாக கூட ஆகி விடும். மருத்துவ உலகத்திலே ஒவ்வாமையை இரண்டு வகையாக பிரிக்கின்றார்கள். திடீர் என்று நோயை உண்டாக்கிவிடும் ஒவ்வாமை ஒரு வகை. இன்னொரு வகையிலே முதன் முதலிலே உடம்பை அடையும் ஒவ்வாமைகளாவே எந்த வியாதியும் வருவதில்லை. இரண்டாவது தடவையும் ஒவ்வாமைகளாவே பாதிப்பு ஏற்பட்ட பின்பு தான் நோயோட அறிகுறிகள் வெளியே தெரியும்.


ஒவ்வாமை ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று கேட்டால் எத்தனையோ காரணத்தை சொல்லுகின்றார்கள். மனதிலே ஏற்படுகிற காரணமில்லாத பீதி கூட ஒவ்வாமையை உண்டாக்கி விடுகிறதாம். அதனாலே எல்லோரும் எப்போதும் தைரியமாக இருங்கள். ஒவ்வாமையினாலே உண்டாகின்ற நோயை தற்காலிகமாக குணப்படுத்தலாம்.

எந்தப் பொருள் நமது உடம்புக்கு ஒத்துழைக்கவில்லையோ அதைப் புரிந்து கொண்டு அதை விட்டு விடுவது தான் விவேகம். சில குடும்பத்தலைவிகள் இந்த விடயத்திலே அதிகம் விவேகமாக நடந்து கொள்வது உண்டு. வீட்டுக்காரருக்கு எது எது ஒத்துக்கும். எது எது ஒத்துக்காது என்று அதிக அக்கறையோட தெரிந்து வைத்திருப்பார்கள். ஒரு அம்மா பட்டுப்புடவை வாங்கவேண்டும் என்றால் தனியாகத்தான் போவார்கள். வீட்டுக்காரரை அழைத்துக்கொண்டு போவதில்லை. ஏன் என்றால் ஆடை எடுத்த பற்றுச்சீட்டை பார்த்தால் அவருக்கு ஒவ்வாமை வந்துவிடுமாம். அவரிலே அவ்வளவு அக்கறை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தல் தடுப்பு நல்லிணக்கத்திற்கான சாவுமணி

## சமத்துவக் கட்சியின் பொதுச்செயலாளர்



(கிளிநொச்சி)


சர்வதேசத்தின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட நிலைமாறுகால நீதி பொறிமுறையில் நினைவேந்தல் மிக முக்கிய பகுதியாகும். அந்த நினைவேந்தல் நிகழ்வைக் கூட தமிழ் மக்கள் மேற்கொள்ள முடியாதபடி அரசும் அதன் கட்டமைப்பான பொலிஸாரும் மேற்கொள்ளும் தடை நடவடிக்கைகள் இந்த நாட்டின் நல்லிணக்கத்தின் மீது அடிக்கும் சாவு மணியே என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச்செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் 2009 இல் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் ஏராளமான மக்கள் கொல்லப்பட்டார்கள், கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்ந்து தங்களை ஆற்றுப்படுத்திக் கொள்வதற்கு கூட முடியாத அளவுக்கு இலங்கையில் தமிழ் மக்கள் மீது அடக்கு முறை பிரயோகிக்கப் படுகிறது. தெற்கிற்கு ஒரு நீதி வடக்கிற்கு ஒரு நீதி என்ற நிலைப்பாட்டில் தமிழ் மக்கள் மீதான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது. இந்த சிறிய தீவில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டிய அரசும் அதன் கட்டமைப்பு பாரபட்சமாக நடந்து கொள்வது என்பது ஒரு காலமும் இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது.

இனங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்படாத போது இலங்கையில் ஒரு போதும் நிலையான சமாதானம் ஏற்படாது எனத் தெரிவித்த அவர் யுத்தம் முடிவுக்கு வந்து 15 வருடங்கள் ஆகின்ற போதும் இனங்களுடைக்கிடையே இடைவெளியும் கூடிக் கொண்டே போகிறதே தவிர குறைவதாக தெரியவில்லை.

பாதிக்கப்பட்ட ஒரு இனத்தின் உணர்வுகளை புரிந்து கொண்டு, நல்லிணக்கத்தை வலுப்படுத்த வேண்டுமே தவிர வெற்றிபெற்ற மனநிலையில் இருந்து கொண்டு தமிழ் இனத்தை கையாள்வது கவலைக்கும் கண்டனத்திற்கும் உரியது. எனவே இந்த அரசு உடனடியாக தமிழ் மக்கள் மீதான இவ்வாறான அடக்கு முறைகளை கைவிட வேண்டும்.

உறவுகளை நினைவேந்தும் உரிமைகளில் அரசோ அதன் கட்டமைப்போ தலையிடக் கூடாது. தமிழ் மக்களை தொடர்ந்தும் காயப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவதனை நிறுத்தி நல்லிணக்கத்தை வளர்த்தெடுக்க முயற்சிக்க வேண்டும் என்றும் சந்திரகுமார் தெரிவித்துள்ளார். (நி)






கிளிநொச்சி வாடகை வாகன உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கனகபுரம் வீதியில் நேற்றைய தினம் முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

(படங்கள்: தேவானந்தன்)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3117

### சதீஷ்

வீட்டு சுவத்தில நோட்டிஸ் ஒட்டவோ..
எழுதவோ கூடாது என்று எழுதி வச்சா..



எவனோ ஒரு பரதேசி..
சரி இனிமேல் எழுத மாட்டேன், ஒட்ட மாட்டேன் என்று எழுதி வச்சிட்டுப் போயிருக்கான்.

### துஷாரா

TV சோப் விளம்பரத்தில குழந்தை அழுக்குச் சட்டையோட வந்தா அம்மா சிரிச்சுகிட்டே துவைக்கிறாங்க..



நான் குழந்தையா இருந்தப்பெல்லாம் அழுக்கா வந்தா, முதல்ல என்ன துவைச்சிட்டு தான் எங்கம்மா சட்டையே துவைப்பாங்க...

### திவ்யா



நோயாளி: மயக்கமா இருக்கு டாக்டர்.
டாக்டர்: சுகர் இருக்கா..?
நோயாளி: இருக்கு டாக்டர்.
டாக்டர்: எப்ப பாத்தீங்க..?
நோயாளி: இன்னைக்கு காலைல.
டாக்டர்: எவ்வளவு இருந்திச்சு..?
நோயாளி: அரை டப்பா ...டாக்டர்..
டாக்டர்: ....?....?

### சுபலோஜன்

காலையில் தினமும் கண் விழித்தால் நான் கை தொழும் தேவதை அம்மா தானே சார்..?



அதான் இல்லை நான் கை தொடும் பொருள் என்னோட போன் தான்...

### மதுவந்தி

ரெக்க மட்டும் இருந்தா என் ஆளு...



தேவதையா மாப்ள? ஆந்தை மாமா..



நைட்டு புல்லா ஆன் லைன்ல இருக்கா!

### டனீன்

மனசுக்கு கஷ்டமா இருக்குனு சொன்னா ஆளாளுக்கு Advice பண்ண வருவாங்க



கொஞ்சம் பணத்துக்கு கஷ்டமா இருக்குனு சொல்லிப் பாருங்க ஓடிப்போயிருவாங்க...

ங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
இவை உங்கள் பெயருடன் ... facebook ... பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 481





மேகத்திரள் மேலும் மேலும் வானில் உயர்ந்து வந்து கொண்டிருந்தது. காற்றின் வேகமும் அதிகரித்து வருவதாகத் தோன்றியது. கப்பல் இலேசாக அசைய ஆரம்பித்தது.

காற்றின் ரீங்காரத்துக்கும் அலைகளின் சலசலப்புக்கும் இடையில், அது என்ன சத்தம்? கடலில் ஏதோ விழுந்தது போல் சத்தம் கேட்டதே! வந்தியத்தேவன் பின்பக்கம் திரும்பிப் பார்த்தான். ரவிதாஸனையும் தேவராளனையும் காணவில்லை. அதில் அதிசயமும் இல்லை. கப்பலின் மறுபக்கத்திலே அவர்கள் இருப்பார்கள். பாய்மரங்களும் கப்பலின் மையமேடையும் அவர்களை மறைத்திருக்கின்றன.

ஆ! இது என்ன? துடுப்புகளினால் படகு தள்ளும் சத்தம் அல்லவா கேட்கிறது? வந்தியத்தேவன் உடனே ஓடிச் சென்று கப்பலின் மறுபக்கத்தை அடைந்தான். அவன் அங்கே கண்ட காட்சி உண்மையில் அவனைத் திடுக்கிடச் செய்தது. அப்படி நடக்கக் கூடும் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. தன்னைச் சமரசப்படுத்துவதற்காக அவர்கள் கலந்து யோசனை செய்யப் போயிருக்கிறார்கள் என்றே நினைத்தான். ஆனால் அவர்கள் கப்பலின் மறுபக்கத்தில் சேர்த்துக் கட்டியிருந்த சிறு படகை அறுத்துவிட்டுக் கடலிலே, இறங்கி அதில் ஏறிக்கொண்டிருந்தார்கள்! துடுப்பு வலித்துப் படகைத் தள்ளவும் ஆரம்பித்து விட்டார்கள்!

வந்தியத்தேவனைப் பார்த்ததும் ரவிதாஸன் சிரித்தான். "தம்பி! சமுத்திர ராஜனுக்குப் பலியாக எங்களுக்கு விருப்பம் இல்லை தெரிகிறதா?" என்றான்.

வந்தியத்தேவன் ஒரு நொடியில் தன் நிலையை உணர்ந்தான் அந்தப் பெரிய மரக்கலத்தில் தன்னைத் தனியாக விட்டுவிட்டு, அவர்கள் போகிறார்கள். கப்பல் ஓட்டும் கலையைப் பற்றி அவனுக்கு ஒன்றுமே தெரியாது. கடலில் எந்த இடத்தில் கப்பல் நிற்கிறது, எந்தத் திசையாகப் போனால் எங்கே போய்ச் சேரலாம் என்பதொன்றும் அவனுக்குத் தெரியாது. அப்படிப்பட்ட அநாதரவான நிலையில் அவனை விட்டு விட்டு அவர்கள் போகிறார்கள்.

"பாவிகளே! என்னையும் அழைத்துக்கொண்டு போகக் கூடாதா?" என்று கேட்டான்.

"தம்பி! சமுத்திர ராஜனுக்கு ஒரு பலிகூட இல்லாமற் போகலாமா?" என்றான் ரவிதாஸன். படகு கப்பலை விட்டு அகன்று போய்க்கொண்டேயிருந்தது.

'கடலில் குதித்துப் படகைப் போய்ப் பிடிக்கலாமா?' என்று வந்தியத்தேவன் ஒரு கணம் நினைத்தான். உடனே அந்த எண்ணத்தைக் கைவிட்டான். அவனுக்கோ நன்றாக நீந்தத் தெரியாது. கப்பலிலிருந்து குதிப்பதற்கே மனம் திடப்படாது. அப்படிக் குதித்துத் தட்டுத் தடுமாறிச் சென்று படகைப் பிடித்தாலும் அந்தக் கிராதகர்கள் என்ன செய்வார்களோ, என்னமோ? தன்னிடம் அவர்களுடைய இரகசியத்தை வெளியிட்டு விட்டார்கள்! தான் அவர்களுடன் ஒருநாளும் சேரப் போவதில்லையென்பதையும் தெரிந்து கொண்டார்கள். படகைப் பிடிக்கப் போகும் சமயத்தில் அவர்கள் தன்னைத் துடுப்பினால் அடித்துக் கொல்லப் பார்க்கலாம். தான் தண்ணீரில் தத்தளித்துக் கொண்டே படகில் உள்ளவர்களுடன் சண்டை போட முடியாதல்லவா?


'போகட்டும்! போய்த் தொலையட்டும்! அந்தச் சண்டாளக் கொலைக்காரர்களுடன் ஒரு படகிலே இருப்பதைக் காட்டிலும் இந்தப் பெரிய கப்பலில் தன்னந் தனியாக இருப்பதே மேல்! இதற்கு முன்னால் எத்தனையோ சங்கடங்களிலிருந்து கடவுளின் கிருபையினால் தான் தப்பிப் பிழைக்கவில்லையா? இந்த அபாயத்திலிருந்து தப்புவதற்கும் கடவுள் ஏதேனும் வழி காட்டுவார்! பாவிகள் போகட்டும். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

(நேற்றைய தொடர்ச்சி)

## கறுப்பு சீயூ!



பின்னர் நேராக அரசரின் முன்னால் வந்து நின்றாள்.

அவளது அசிங்கமான தோற்றத்தைப் பார்த்து அரசர் வியப்படைந்தார். இப்படியும் அசிங்கமாக பெண்கள் இருக்க முடியுமா என்று சிந்தித்தார்.

பெண்ணே உனக்கு என்ன வேண்டும்? என்று அரசர் கேட்டார்.

எனக்கு ஆட்சிப் பணி செய்ய அனுமதி வேண்டும், என்றாள்.

நீ ஏன் அவ்வாறு கேட்கிறாய்? என அரசர் கேட்டார்.

ஏனென்றால், நமது நாடு இக்கட்டான நிலையில் இருக்கிறது. நூயு, சோயு, என்ற பக்கத்து நாடுகள் நம்மை விழுங்க தயாராகிவிட்டன. அதே சமயம் நமது நாடும் மிகுந்த குழப்பத்தில் உள்ளது.

இது ஜீவ மரணப் போராட்டமே ஆகும்! ஆனால், தாங்கள் இதில் அக்கறை இல்லாமல் இருப்பதை நினைத்தால், எனக்கு மிகுந்த வருத்தமாக இருக்கிறது," என்று சொன்னாள்.

அவளது சொல்லைக் கேட்ட அரசர் அதிர்ச்சியடைந்தார். இதுவரை நாம் இதைக் கண்டு கொள்ளாமல் ஆடம்பர பிரியராக இருந்தது எவ்வளவு பெரிய தவறு" என்பதை அறிந்தார்.

"சீயூ, என்னை மன்னித்து விடு.... நான் நாட்டின் மீது அக்கறை இல்லாமல் இருந்து விட்டேன்.

இன்று முதல் உன்னை எனது முதன்மை அமைச்சராக நியமிக்கிறேன்," என்றார்.

அரசர் சீயூவின் ஆலோசனையை கேட்டு நாட்டை காப்பாற்றினார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் சீயூ, பட்டத்து ராணியாகவும் நியமிக்கப் பெற்றார். கடைசி காலம் வரை, அவள் அரசருக்கு உற்ற தோழியாகவும் இருந்தாள்.

கறுப்பு நிறத்தில் அழகற்றவளாய் இருந்த சீயூ, இன்றும் மக்களால் போற்றிப் புகழப்படுகிறாள். (முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் எண்ணங்களின் பிரதிபலிப்பே செயல்களாகவும் மற்றும் வாழ்வின் அனுபவங்களாகவும் மாறுகின்றன. ~ யாரோ

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## நினைவேந்தல் உரிமைக்காக சட்டத்தரணிகள் அணிதிரள வேண்டும்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைத் தடுத்து நிறுத்துவதில் பொலிஸார் தீவிரமாக உள்ளனர்.

அவர்களின் இந்நடவடிக்கையைப் பார்க்கும்போது, தமிழர் தாயகத்தில் பொலிஸாரின் இருப்பு என்பது நினைவேந்தலைத் தடுப்பதற்காகவோ என்று எண்ணுகின்ற அளவில் நிலைமை உள்ளது.

ஆம், வன்னிப் பெருநிலப்பரப்பில் கொன்றொழிக்கப்பட்ட தங்களின் உறவுகளை நினைவேந்துகின்ற நிகழ்வாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அமைகிறது.

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

அந்தக் கொடூரம் நடந்து 15 ஆண்டுகள் நிறைவடைகின்ற இவ்வேளையில், முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்களை நினைவு கூருவதென்பது அவசியமும் அடிப்படை உரிமையுமாகும்.

தவிர, வன்னி இறுதிப் போரில் பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் என்பது நிராகரிக்க முடியாத நிஜம்.

நிலைமை இதுவாக இருக்கையில், முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த தம் உறவுகளை தமிழ் மக்கள் நினைவுகூருவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதில் பொலிஸார் அதி தீவிரத்தனம் காட்டுவதுதான் அதிர்ச்சியைத் தருகிறது.

ஆம், ஒரு நாட்டின் பொலிஸ் சேவை என்பது அந்நாட்டு மக்கள் அனைவருக்குமானது.

தவிர, பொலிஸாரின் உன்னதமான கடமை சட்டத்தை நிலைநாட்டுவதாகும்.

ஆனால் இங்கு சட்டத்தை நிலைநாட்டுவதில் இருந்து பொலிஸார் விலகுவது வெளிப்படையாகிறது.

இதற்கு நல்ல உதாரணம், திருகோணமலை சம்பூரில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் நான்கு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அதிலும் இக் கைது இரவோடு இரவாக நடந்தேறியுள்ளது.

இறந்தவர்களை நினைவேந்துவது அடிப்படை மனித உரிமை என்பதை உலகம் ஏற்றுக்கொண்டுள்ளபோது, இங்கு மட்டும் போரில் அகப்பட்டு உயிரிழந்த அப்பாவித் தமிழ் மக்களை நினைவேந்துவதைப் பொலிஸார் தடுக்கின்றனர் என்றால், அங்குதான் பொலிஸார்; அடிப்படை உரிமைகளை மறுக்கின்றனர் என்பது தெரியவருகிறது.

அதிலும் நினைவேந்தலைச் செய்ததற்காக இரவோடு இரவாக நான்கு பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்றால், அங்கு ஓர் அடக்குமுறையும் பயமுறுத்தலும் எச்சரிக்கையும் விடப்படுகிறது எனப் பொருள் கொள்வதில் தவறில்லை.

எனவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைத் தடுக்கின்ற பொலிஸாரின் அராஜகத்திற்கு எதிராக எமது தமிழ்ச் சட்டத்தரணிகள் அணிதிரள வேண்டும்.

அவ்வாறு அணிதிரள்வதன் மூலம் அடிப்படை உரிமையை மீற நினைத்தால், தமிழ்ச் சட்டத்தரணிகள் வெறுமனே பார்த்திருக்க மாட்டார்கள் என்ற செய்தி பொலிஸாருக்கு உணர்த்தப்பட வேண்டும்.

# நினைவேந்தல் உரிமையை மறுத்தல் பேரினவாதத்தின் கொடூர முகம்

## மூதூர் கைது தொடர்பில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு கண்டனம்

(திருகோணமலை)

நினைவேந்தல் உரிமையை மறுத்தல் பேரினவாத அரசின் கொடூர முகத்தை காட்டுகின்றது என ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு தனது வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் சார்பில் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு அகத்தியர் அடிகளார் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், திருகோணமலை மூதூரிலுள்ள சேனையூர் பிள்ளையார் ஆலயத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை அதிர்ச்சி அளிக்கின்றது.

நினைவு கூரல் என்பது ஒவ்வொரு மனிதனும் அடிப்படை உரிமையாகும். உலகளாவிய அனைத்து சர்வதேச சட்டங்களும் அதனை ஆழமாக வலியுறுத்துகின்றன. இந்நிலையில் திருகோணமலை சேனையூரில் நடைபெற்றுள்ள இச்சம்பவம் மிகுந்த வேதனையை ஒட்டுமொத்த தமிழ் மக்களிற்கும் ஏற்படுத்தி உள்ளது. சொல்லொணாத்துயர் வலி சுமந்த இந்த நாட்களில் தங்கள் உறவுகளை நினைந்து பிரார்த்திப்பதற்கு அந்த நாட்களில் அவர்கள் பட்ட துயரத்தை கஞ்சி பருகி உயிரை பிடித்திருந்த அவலத்தை நீள நினைந்து தாமும் கஞ்சி காய்ச்சி குடிப்பதும் பரிமாறுவதும் குற்றமாக அரச இயந்திரத்தால் பார்க்கப்படுவது இலங்கையில் 15 ஆண்டுகளாகியும் பேரினவாத மனநிலையில் மாற்றம் வராத கொடூர முகத்தின் வெளிப்பாடாகும். இது தொடர்ந்தும் இனங்களிற்கு இடையேயான நல்லெண்ணத்தை ஆழமாக பாதிக்கும் செயற்பாடாகும்.

புனிதமான கோவிலில் உறவுகளை நினைந்து கஞ்சி காய்ச்சிய பெண் பிள்ளைகள் உள்ளிட்டோரை அராஜகமாக கைது செய்த செயல் மிகுந்த கண்டனத்துக்குரியது.

இந்த விடயத்தில் தமிழ் தேசிய கட்சிகள் அனைத்தும் ஒருமித்து பாரிய எதிர்ப்பை வெளிக்காட்டி அரசின்

கோர முகத்தை துகிலுரித்து அப்பாவிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

தமிழ் தேசியம் பரப்பில் வாழும் மூத்ததலைவர் திருகோணமலையை தற்போதும் பிரதிநிதித்துவப்படுத்தும் இரா. சம்பந்தன் அவர்களுடைய மாவட்டத்தில் இச்சம்பவம் இடம்பெற்றிருப்பதும் பிணை கூட வழங்கப்படாமல் பெண்பிள்ளைகள் உள்ளிட்டோர் விளக்கமறியலில் இரு வாரம் வைக்கப்பட்டிருப்பதும் மனதை வருத்துகின்றது.

உடனடியாக அனைத்து தமிழ்தேசிய சக்திகளும் இவர்களின் விடுதலைக்கு சகல எத்தனங்களை செய்ய வேண்டுவதுடன் அனைத்து முற்போக்கு மற்றும் உலகளாவிய சக்திகளதும் கவனத்தை ஈர்த்து அரசிற்கு அழுத்தத்தை பிரயோகித்து நினைவுகூரலுக்கான உரிமையை உறுதிப்படுத்துமாறும் வலிசுமந்த இந்த நாட்களில் உங்கள் அனைவரையும் வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது. (ம-7,10,33)

# விவசாய வர்த்தகத் துறையை நாட்டில் உருவாக்கவுள்ளேன்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

பாரம்பரிய பெருந்தோட்டக் கைத்தொழிலுக்கு பதிலாக புதிய விவசாய வர்த்தகத் துறையொன்றை நாட்டில் உருவாக்கி, நாட்டை பொருளாதார ரீதியாக முன்னோக்கி கொண்டு செல்வதற்காக தாம் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புதிய சட்டத்தின் மூலம் தொடர்புபட்ட நிறுவனங்கள் எதிர்கொள்ளும் தடைகள் நீக்கப்படும் என்றும், பெருந்தோட்டத்துறையில் புதிய தொழில்நுட்ப முகாமைத்துவத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அத்துருகிரிய தேசிய தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் புதிய கல்வி மற்றும் நிர்வாக கட்டிடத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை குறிப்பிட்டார்.

பெருந்தோட்டத்துறைக்குத் தேவையான புதிய திறன்களைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்கவும் இளைஞர்களுக்கு உயர் கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்தவும் தேசிய தோட்ட முகாமைத்துவ நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சிக் கூடங்கள், விரிவுரை மண்டபங்கள், கணினி ஆய்வகங்கள் மற்றும் பட்டதாரி மாணவர்களுக்கான தொழில் ஆலோசனை மையங்கள் இங்கு நிறுவ திட்டமிடப்பட்டுள்ளதுடன், AI மற்றும் GIS தொழில் நுட்பத்தைப் பயன்படுத துவதற்கான மையமும் இங்கு நிறுவப்படவுள்ளது.

விவசாயத்தை அபிவிருத்தி செய்வதன் மூலமே நாட்டின் கிராமப்புற மக்களின் வறுமையை ஒழிக்க முடியும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டுக்கு கடன் வழங்கிய நாடுகளுடனும் ஏனைய தனியார் கடன் வழங்குநர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக கூறிய ஜனாதிபதி, முதற்கட்ட பேச்சுவார்த்தையின் பின்னர் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் சவாலை எதிர்கொள்ள வேண்டும்எனவும் குறிப்பிட்டார். (ம-7,10)

# சுமந்திரன் கூறுவது அப்பட்டமான பொய்

## சுரேஷ் பிரேமச்சந்திரன்

(கரணவாய்)

ஜனாதிபதி தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடுமாறு எம்.ஏ.சுமந்திரனை நான் கேட்கவில்லை, இது வெறும்அப்பட்டமான பொய், அது அவரது அதீதமான கற்பனையின் வெளிப்பாடு என சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கோப்பாயில் நேற்று செவ்வாய்க்கிழமை (14) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவி[illegible]க்கையில் இன்றைய (நேற்றைய) ஊடகங்களில் ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது, சுமந்திரன் அவர்களிடம் ஜனாதிபதி தமிழ் பொது வேட்ப்பாளராக போட்டியிடுமாறு யாராவது உங்களிடம் கோரினார்களா? என்று கேள்வி எழுப்பப்பட்டது. அவர் கூறியிருக்கின்றார் :- உத்தியோகபூர்வமாக யாரும் தன்னிடம் கேட்கவில்லை.

இருந்தபோதும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தன்னைச் சந்தித்து நீங்கள் நிற்ப்பீர்களா என்று என்[illegible]னிடம் கேட்டதாகவும் தான் அதை மறுத்ததாகவும் ஒரு செய்தி சொல்லியிருக்கின்றார்.

அது ஒரு உண்மையான விடயம் அல்ல. ஒரு சில மாதங்களுக்கு முன்பாக ஒரு பொது வேட்பாளர் தொடர்பாக கருத்தை அவரிடம் கேட்டிருந்தேன் என்பது உண்மை. பொது வேட்பாளரது தேவையைப் பற்றி நான் கூறியிருந்தது மாத்திரமல்ல அவரது கருத்தையும் நான் கேட்டருந்தேன் என்பது உண்மை.

அந்த வேளையில் யார் வேட்பாளர் என்பது பற்றி நாங்கள் யோசிக்கவேயில்லை. அவ்வாறான வேளையில் நான் அவரைப் போய் பொது வேட்ப்பாளராக நில்லுங்கள் என்று நான் கேட்டதாக அவர் கூறியது ஒரு அதீதமான கற்பனையின் வெளிப்பாடோ என்பது எனக்குத் தெரியவில்லை.

ஆனால் அவ்வாறான ஒரு விடயத்தை நான் அவரிடம் கேட்கவில்லை என்பதை முதலாவதாக நான் மக்களுக்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன். தமிழ் பொது வேட்ப்பாளர் தேவை என்பதில், ஈ.பி.ஆர்.எல்.எப் நாங்கள் மிகத் தெளிவாக இருக்கின்றோம்.

ஆகவே நான் சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரனிடம் நீங்கள் நில்லுங்கள் என்று கேட்டதாக கூறுவது இந்தப் பேச்சுக்களை, கலந்துரையாடல்களை குழப்புவதற்கான முயற்சியாகக் கூட இருக்குமோ என்று நான் சிந்திக்கின்றேன் என்றார்.

(ம-7,10,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரமாகப் பரவி வரும் வைரஸ் காய்ச்சல்

## பொது மக்களுக்கு விசேட அறிவுறுத்தல்

(கொழும்பு)

**இலங்கையில் தற்போது இன்புளுவென்சா வைரஸ் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருவதாக பொரளை - சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்துமாறும் அவர் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளார்.

2 வயதுக்குட்பட்ட சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டோரை அதிக அவதானத்துடன் செயற்படுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

காய்ச்சல், இருமல், வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகள் தென்படுமாயின் உடனடியாக அரச வைத்தியர் ஒருவரை நாடுமாறும் பொரளை - சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா அறிவுறுத்தியுள்ளார். (நி)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் ஓய்வூதியம்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஓய்வூதிய முறையை அறிமுகப்படுத்தும் யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இது குறித்து கல்வி அமைச்சும் சமூக வலுவூட்டல் அமைச்சும் இணைந்து இந்த அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய கூட்டணியின் களுத்துறை மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் மாநாட்டில் கலந்துகொண்ட போதே கல்வி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை சமுர்த்தி வங்கியின் ஊடாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கடன் வழங்கும் முதலாவது வேலைத்திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கை வரலாற்றில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஓய்வூதியம் வழங்குவது குறித்த யோசனை முன்வைக்கப்படுகின்றமை இதுவே முதன் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# தாதியர்களுக்கான ஆட்சேர்ப்பை துரிதப்படுத்துங்கள்-சஜித் கோரிக்கை



(கொழும்பு)

2019/2020 காலப்பகுதியில் வெளியேறிய சுமார் 3000 பேர் தாதியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் 3000 பேர் நியமிக்கப்படவுள்ளனர். இந்த ஆட்சேர்ப்புகளை துரிதப்படுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

கொரோனா வைரஸ் பரவல், வங்குரோத்து நிலை போன்றவற்றால் இந்த ஆட்சேர்ப்பு தாமதமானது. இதை மேலும் தாமதப்படுத்தாமல் இந்த ஆட்சேர்ப்புகளைத் துரிதப்படுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (நி)

# கிராம உத்தியோகத்தர்கள் சுகயீன விடுமுறைப் போராட்டம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கிராம உத்தியோகத்தர்கள் நேற்று முதல் சுகயீன விடுமுறைப் போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

வேதன அதிகரிப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக அகில இலங்கை சுதந்திர கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அதற்கமைய நாடளாவிய ரீதியில் கிராம உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து விலகி செயற்படுகின்றமையால் பொதுமக்கள் நேற்று அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

முன்னதாக கடந்த 6 மற்றும் 7 ஆம் திகதி கிராம உத்தியோகத்தர்கள் சுகயீன விடுமுறை போராட்டத்தினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சா/த பரீட்சைக்கு தோற்றிய 80 வயது முதியவர்

(கொழும்பு)

தற்போது நடைபெற்று வரும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 80 வயது முதியவர் ஒருவர் கணித பாடத்தில் தோற்றியுள்ளமை அனைவரது கவனத்தினையும் ஈர்த்துள்ளது.

நிமல் சில்வா என்ற பாணந்துறை - கிரிபெரிய பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்.

இவர் ஒரு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி. கல்விக்கு வயது ஒரு தடை இல்லை என்பார்கள்.

இதற்கமைய குறித்த முதியவர் பரீட்சையில் தோற்றியுள்ளமை கல்வி மீதான அவரது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் குறித்த முதியவருக்கு பலரும் சமூக வலைத்தளங்களில் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர். (நி)

# தாதியருக்கான விசேட கொடுப்பனவு அதிகரிப்பு - சுகாதார அமைச்சர்



(கொழும்பு)

மே மாதம் முதல் விசேட கடமைக் கொடுப்பனவு இரட்டிப்பாக அதிகரிக்கப்படும் என கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

சர்வதேச தாதியர் தின நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சுகாதாரத் துறையில் தாதியர் சேவையின் சிறப்பை அங்கீகரிக்கும் வகையில் சீருடை கொடுப்பனவை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அவர் கூறுகையில், "இலங்கையின் சுகாதார சேவையில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் அதிகமானோர் பணிபுரிகின்றனர்.

நாட்டின் அரசியல்வாதிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வரும் சூழலில், இலங்கையில் தாதியர் சேவை மீது அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படாமை மிகுந்த மரியாதையுடனும் மகிழ்ச்சியுடனும் உள்ளது" எனத் தெரிவித்தார். (நி)

# ஜூன் 5 இல் உ/த வகுப்புகள் ஆரம்பம்

(கொழும்பு)

கல்வி பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாவதற்கு முன்னதாக உயர்தரத்திற்கான வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கல்வி அமைச்சர் முன்வைத்த யோசனைத் திட்டத்திற்கு அமைச்சரவை இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

இதற்கமைய கல்வி பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றி வரும் மாணவர்களுக்கான உயர்தர வகுப்புகளை எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வி பொதுத்தராதர சாதாரண தரம் வரை மாத்திரம் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் பாடசாலை மாணவர்களை உயர்தரத்திற்காக அருகிலுள்ள பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கும் உயர்தர வகுப்புகளில் குறிப்பிட்ட பாடத்திட்டம் உரிய பாடசாலையில் கற்பிக்கப்படாவிடின், அந்த பாடத்திட்டம் கற்பிக்கப்படும் பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுப்புவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலை பரீட்சை அட்டவணைகளை வழமைக்கு கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு அமைவாகவே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலங்கையின்...

வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன பிரச்சினை தொடர்பான ஒத்திவைப்பு வேளை பிரேரணை நேற்று பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமினால் முன்வைக்கப்பட்டது.

குறித்த பிரேரணை மீதான விவாதத்தின்போதே பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் தேசிய பிரச்சினையை, பாலஸ்தீன பிரச்சினைபோல இலங்கை அரசாங்கம் கருத வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை அரசாங்கம் எமது நாட்டில் உள்ள பிரச்சினையை தீர்க்க முற்படாமல் பாலஸ்தீன பிரச்சினையை தீர்க்க முற்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## ஐஸ் போதைப்...

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், அவர்களால் இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஐஸ்போதைப் பொருள் உற்பத்தி செய்வதற்கு பயன்படும் பொருட்களும் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரின் கண்காணிப்பில் உள்ளனர்.

குறித்த வீடு ஐஸ் போதைப் பொருள் உற்பத்தி செய்யும் ஆய்வு கூடமாக செயற்பட்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் வீடானது சீல் வைக்கப்பட்டுள்ளதுடன் கொழும்பில் இருந்து இரசாயன பகுப்பாய்வாளர்கள் வரவழைத்து பகுப்பாய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பிரதான சந்தேகநபர் தப்பியுள்ள நிலையில் அங்கு பணிபுரியும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## மேலும் 5 ஆண்டு...

பிரதமர் ராஜீவ் காந்தி 1991ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்திய மத்திய அரசு தடை செய்தது.

இத் தடை ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் நீட்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்தியத் தேசிய பாதுகாப்புக் கருதி விடுதலைப் புலிகள் இயக்கம் 1992 ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி இந்தியாவில் முதன்முதலில் தடை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## பிரபாகரன்...

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களது பூர்வீக வீட்டிற்கு அருகில், ஆலடிச்சந்தியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

அதன்போது, முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தியில் முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்து இரு மாவீரர்களின் தந்தையான தங்கேஸ்வரனால் பொதுச்சுடரேற்றி வைக்கப்பட்டு தொடர்ச்சியாக ஈகச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. (ம-7,10,33)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## நினைவேந்தல்...

சிங்க தெரிவித்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

நேற்றைய தினம் இடம்பெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறியதாக அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மேற்குறிப்பிட்ட கருத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏலவே கூறியிருந்தபோதிலும் அதனைப் பொலிஸார் கிஞ்சித்தும் கடைப்பிடிப்பதாக இல்லை என அரசியல் நோக்கர்கள் கருத்துரைத்துள்ளனர். (ம-7,10)

## 15 வயது...

பகுதியை சேர்ந்த சிறுமியே தலைமறைவாகி உள்ளதாக வைத்தியசாலை தரப்பால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் தலைமறைவாக இருந்த 15 வயதுடைய சிறுமியான

தாயை நெல்லியடி பொலிஸார் மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதித்திருந்தனர்.

இந் நிலையில் குறித்த சிறுமியினை தாய்மை அடைய செய்ய காரணமாக இருந்த மல்லாவியை சேர்ந்த 25 வயது உடைய இளைஞர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,10,60)

## தமிழரின்...

தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கொழும்பிலிருந்து கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்.

அதில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு,

"இரவில் ஆண் பொலிஸாரால் அநாகரிகமான முறையில் பெண்கள் கைது செய்யப்படுகின்றார்கள். நம் நாடு எங்கே போகின்றது? 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி இறந்தவர்களின் நினைவாக கஞ்சி வழங்கிய சில பெண்கள் பொலிஸாரால் வலுக்கட்டாயமாக - முரட்டுத்தனமாகக் கைது செய்யப்பட்டு அவர்களது வீடுகளில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கஞ்சி வழங்குவது ஆரோக்கியமற்றது என நீதி மன்றத்தில் பொலிஸார் உத்தரவு பெற்று, அவ்வாறு விநியோகிக்கத் தடை உத்தரவு வாங்கியுள்ளனர் எனத் தெரிகின்றது.

அப்படியானால் பொதுச் சுகாதார அதிகாரி மூலம் அல்லவா அந்த உத்தரவைப் பெற்றிருக்க வேண்டும்? பொலிஸ் எதற்கு? அம்பிகா சற்குணநாதன் அம்மையார் கேட்டது போல், மே தினத்தை ஒட்டியோ அல்லது வெசாக் தான தினத்திலோ பொலிஸார் அத்தகைய தடை உத்தரவுகளைப் பெறுவார்களா? 2009ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதியை ஒட்டிய காலத்தில் இலங்கை இனவாத அரசினால் ஒப்பேற்றப்பட்ட இனப் படுகொலையை மூடிமறைக்கும் அப்பட்டமான முயற்சியே இது.

இத்தகைய தேவையற்ற, கபடத்தனமான மூடிமறைப்புச் செயல்களை இலங்கை நாடும், அதன் அரசும் எந்தளவுக்கு மேற்கொள்கின்றனவோ, அவ்வளவுக்கு அதிகமாக, இறந்தவர்களை நினைவுகூர்ந்து, சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் நமது மக்கள் மிகவும் உறுதியாக இருப்பார்கள்.

கைதானவர்களுக்கு எதிரான அறிக்கைகளைத் திரும்பப் பெற்று, நெருக்கடியில் இருக்கும் அந்தப் பெண்கள் உட்பட அனைவரையும் விடுவிப்பதற்கான உத்தரவை ஜனாதிபதி வழங்குவார் என்று நம்புகின்றேன்.

2009 ஆம் ஆண்டு மே 18ஆம் திகதியை எனது தமிழ்ச் சகோதரர்கள் கூடுதலான உற்சாகத்துடனும் உறுதியுடனும் நினைவுகூர்வார்கள்" என்றுள்ளது. (ம-7,10)

மஹஜன சம்பத
திகதி 2024.05.14
சீட்டிழுப்பு இலக்கம் 5475
W 7 8 5 1 1 4
அத சம்பத W 5 1 1 4
சீட்டிழுப்பு இலக்கம் 50
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.05.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1505
A 36 50 69 82 A
Double Chance 06144

மெகா பவர்
திகதி 14/05/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1823
X 06 11 31 48 79
57945

லக்கி 7 VIP
திகதி 2024.05.14
சீட்டிழுப்பு இலக்கம் 301
T 7 0 1 2 3 5 T

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3717
சீட்டிழுப்பு திகதி 14.05.2024
W 12 27 37 77
W 40424
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.14
சீட்டிழுப்பு இலக்கம் 0784
மீனம் 16 34 35 51 மீனம்
68303 03

உத்தியோகபூர்வ முடிவுகள்
14.05.2024 வெற்றி வாரம் 183 வர்ணம் சிவப்பு
M 9 5 1 3 5 1
63425 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,257,992.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு 2449 சீட்டிழுப்பு திகதி 14.05.2024 தினம் செவ்வாய்
06 52 57 63 Z
76945
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 88,369,432.00

சனிதா
திகதி 2024.05.14 வெற்றி வாரம் 4610 வர்ணம் பச்சை
48 53 56 63 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,798,650.00
23547

சசிரி
477
2024.05.14
02 18 19
07
18205
ரூ.3,006,800/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4161 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.05.14 தினம் செவ்வாய்க்கிழமை
06 54 55 61 மேஷம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 9,122,582.00
461148

கப்ருக
V 07 15 25 40 70
161825
14.05.2024 செவ்வாய்
982614
அடுத்த சுப்பர் ஜக்பொட் 522,614,328.60

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2275
சீட்டிழுப்பு திகதி : 2024.05.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 113,068,108.80
02 19 63 68 V
788018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளி/முருகானந்தா கல்லூரி அதிபர்
திருமதி சூரியகுமாரி இராசேந்திரம் அவர்களின்

# மணிவிழா வாழ்த்து



**திருமதி சூரியகுமாரி இராசேந்திரம்**

நியமனத் திகதி – 1994.09.05
சேவைக்காலம் – 30 வருடம்
ஆசிரியர் – 03 வருடம்
நிர்வாக உதவியாளர் – 03 வருடம்
அதிபர் – 24 வருடம்

Best Wishes!

- கிளி/ கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை - நிர்வாக உதவியாளர் 1994.09.05 - 1995.03.14 வரை
- கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி - நிர்வாக உதவியாளர் 1995.03.15 - 1997.03.31 வரை
- ஆசிரியர் - கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி 1997.04.01 - 1999.05.19 வரை
- ஆசிரியர் - கிளி/ பரந்தன் அ.த.க பாடசாலை 1999.05.20 - 2000.04.23
- கடமை நிறைவேற்று அதிபர் - கிளி/ பரந்தன் அ.த.க பாடசாலை 2000.04.24 - 11.10.2012 வரை
- அதிபர் - தரம் II கிளி/ பரந்தன் அ.த.க பாடசாலை 2012.10.12 - 2013.01.01 வரை
- கிளி/ இராமகிருஸ்ண வித்தியாலயம் 2013.01.02 - 2016.11.30
- அதிபர் - கிளி/ பூநகரி நல்லூர் ம.வி 2016.12.01 - 2020.03.05 வரை
- கிளி/ முருகானந்தா கல்லூரி 2020.03.06. - 2024.05.14 வரை

15.05.2024 அன்று ஓய்வு பெறும் மணிவிழா நாயகிக்கு வாழ்த்துக்கள்

வாழ்த்துவோர்:- பாடசாலைச் சமூகம்
**கிளி/முருகானந்தா கல்லூரி**
(726)



**வெளிநாட்டு வாய்ப்புக்கள்**

Germany - Study Engineering in English Medium. Age limit 22 years.
Denmark/Australia - Work as Doctors & Nurses. SLMC, SLNC registration with Two years of work experience needed.
Learn IELTS, PTE, OET in the professional way.
(755)
Call:077 768 7821
Unicorn Facilitators Nallur, Jaffna.


# ஓமந்தை இராணுவ சாவடி அகற்றம்

கொரோனா காலப்பகுதியில் வவுனியா ஓமந்தைப் பகுதியில் அமைக்கப்பட்ட இராணுவ சோதனைச்சாவடி அகற்றப்பட்டது.

கடந்த காலங்களில் நாட்டில் கொரோனா பரவல் தீவிரமடைந்ததையடுத்து நாடாளாவிய ரீதியில் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தின் ஓமந்தை. உட்பட பல்வேறு பகுதிகளில் தற்காலிக இராணுவ சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு. பாதுகாப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது.

(ம-7.10)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0365)
076 825 7716 (ஆகாஸ்)



**CANADA VISA**

- உங்கள் குடும்பத்துடன் பயணிக்கலாம்.
- வங்கி வசதிகள் செய்து தரப்படும்.
- 20 வருட அனுபவம். 1800 பேரை அனுப்பி வைத்துள்ளோம்.
- கிடைத்தவர்களை நேரடியாகப் பார்வையிடலாம். (511)

021 222 5686
076 424 7111
Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.



**வேலையாட்கள் தேவை**

உணவகத்திற்கு றொட்டி வேலை செய்ய தெரிந்தவர் தேவை.
(753)
தொடர்புகளுக்கு:
077 6290 894



**V2 VISA SERVICES**
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0366)



**உடனடி வேலை வாய்ப்புக்கள்**

EXECUTIVE OFFICER
✔ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
✔ வயது-22 தொடக்கம் 35
✔ தகுதி- பட்டதாரிகள் (C-0366)
(ஆங்கில அறிவு அவசியமானது)

V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777



# NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD JAFFNA

## 2026 A/L கணித உயிரியல் பிரிவுகள்

நேரடி வகுப்புக்கள் மற்றும் நிகழ்நிலை வகுப்புக்கள்

**தமிழ்மொழி மூலம்**

PHYSICS
திரு. G.பிரபா
திரு. N.கபிலன்
திரு. R.ராகுலன்

CHEMISTRY
திரு. G.BENO
திரு. V.K.நந்தா

BIOLOGY
திரு. V.S. குணசீலன்
திரு. K.இராகவன்

COM.MATHS
திரு. P. செந்தில்நாதன்
திரு. V.S. சிவகரன்

**ENGLISH MEDIUM**

PHYSICS
MR.M.KUGANESWARAN
MR.R.RAAKULAN

CHEMISTRY
MR.G.BENO
MR.V.K.NANTHA

BIOLOGY
MR.V.S.GUNASEELAN

COM.MATHS
MR.P.SENTHILNATHAN
MR.V.S.SIVAKARAN

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

ஆரம்பம் :
19.05.2024
(Sunday)

நிகழ்நிலை வகுப்புகளுக்கு சகல மாவட்டங்களிலும் இருந்து இணைந்து கொள்ளலாம்.

(C-0362)

தொடர்புகளுக்கு : 076 569 3006, 076 566 3006, 077 791 7611


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org